வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 03.10.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 297 | பக்கங்கள் : 12

# 2024 இல் அரச செலவீனம் 203 பில்லியனால் உயர்வு!

## பாதுகாப்பு அமைச்சுக்கு 423 பில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, ஒக். 03

2024 ஆம் நிதியாண்டுக்கான அரச செலவீனம் 203 பில்லியன் ரூபாயால் அதிகரித்துள்ளது. இதேபோல அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டில் பாதுகாப்பு அமைச்சு மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

2024 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள நிலையில், அந்த சட்டமூலம் இம்மாதம் முன்வைக்கப்படவுள்ளது.

இதில், 2024 அரச செலவீனமாக 3 ஆயிரத்து 860 பில்லியன் ரூபாய் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 203 பில்லியன் ரூபாய் அதிகரிப்பாகும்.

அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டில், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அவ்வமைச்சுக்கு அடுத்த

11

# யாழ். சட்டத்தரணிகளும் இரண்டு நாள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 03

முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டு, அவர் நாட்டை விட்டு வெளியேறிய விவகாரத்தில் உரிய நடவடிக்கையெடுக்க வலியுறுத்தி யாழ். மாவட்டத்தில் இன்றும் நாளையும் சட்டத்தரணிகள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி சட்டத்தரணிகள் சங்கத்தினர் இன்று, நாளை என இரண்டு நாட்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.

இன்று யாழ்ப்பாணத்திலிருந்து சென்று முல்லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். நாளை யாழ்ப்பாணத்தில் மனித சங்கிலி போராட்டத்தில் கலந்து கொள்வர். (அ)

# வடக்கு,கிழக்கு சட்டத்தரணிகள் இன்று முல்லைத்தீவில் மாபெரும் போராட்டம்

முல்லைத்தீவு, ஒக்ரோபர் 03

**முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் நேற்று முதல் காலவரையறையின்றி தொடர் நீதிமன்றப் புறக்கணிப்பைச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளனர்.**

முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தை சேர்ந்த சட்டத்தரணிகள் அனைவரும் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாகாது தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணிப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நீதிபதி ரீ.சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக இன்று காலை 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து அனைத்து சட்டத்தரணிகள் சங்கங்களின் சட்டத்தரணிகளும் இணைந்து பாரிய போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

**கடன் மறுசீரமைப்பு;**

# இந்த மாத இறுதியில் உடன்பாடு எட்டப்படும்

கொழும்பு, ஒக்.03

இலங்கையின் பிரதான கடனாளிகளான ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கடனை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளில் இந்த மாதம் இறுதியில் ஓர் உடன்பாட்டை இலங்கை எட்டக்கூடும் என்று ஜப்பானின் சன்கேய் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

இலங்கை தனது சர்வதேச மற்றும்

11

# நீதித்துறைக்கு நீதி வேண்டி கிளிநொச்சியில் கவனவீர்ப்பு





கிளிநொச்சி, ஒக். 03

நீதிவான் சரவணராஜா நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டமைக்கு எதிராகவும் நீதித்துறையின் சுயாதீனம் காக்கவும் தமிழ் தேசத்தின் இருப்பை காக்கவும் கோரி கிளிநொச்சியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் நேற்று காலை 9:30 மணி தொடக்கம் 11 மணி வரை கிளிநொச்சி பழைய கச்சேரி முன்பாக நடைபெற்றது.

போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கிளிநொச்சி நகர வர்த்தகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதுதொடர்பில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் மாண்புமிகு அன்ரனியோ குட்ரெஸ் அவர்களுக்கு அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக, நாளையதினம் கொழும்பில்வைத்து, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரான்சிடம், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் கையளிக்கப்படவுள்ள 'இலங்கை நீதித்துறை மீதான அரச நெருக்கீடுகளுக்கு பரிகாரம் காண்பதற்கான பரிந்துரைப்பு மனு' வாசிக்கப்பட்

11

# டிரான் அலஸ்க்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

கொழும்பு, ஒக். 03

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்கு எதிராக அடுத்த வாரம் சபாநாயகரிடம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கையளிக்கவுள்ளதாக பாராளுமன்றத்தில் சுயாதீன அணியாக செயல்படும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல தெரிவித்தார்.

11

# விமானங்களின் தாமதத்தால் 6 மில்லியன் டொலர் இழப்பு

கொழும்பு, ஒக்.03

எட்டு விமானங்களின் தாமதம் காரணமாக தேசிய விமான நிறுவனமான சிறிலங்கன் எயார் லைன்ஸுக்கு 6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கன் விமான சேவைக்கு சொந்தமான நான்கு விமானங்கள் கடந்த 28ஆம் திகதி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்படுவதற்கு பல

11

## இப்படியும் நடக்கிறது

சரியோ பிழையோ, தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒன்றுதான் தினசரி அரசியலை செய்து கொண்டிருக்கின்றது. தமது சக்தி இவ்வளவுதான் என்பதை அவர்களின் நடவடிக்கைகள் காட்டினாலும்கூட துணிச்சலுடன் போராட்டங்களை அறிவிப்பதும் அன்றாடம் நடக்கும் விடயங்களால் தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற அவலங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுவதிலும் முன்னணி தயக்கம் காட்டுவதில்லை.

மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் ஊடக அறிக்கைகள் அல்லது ஊடக சந்திப்புக்களுடன் தமது வேலை முடிந்தன என்ற பாணியில் அரசியல் செய்துகொண்டிருக்கின்றன. அதுபற்றி சில நாட்களுக்கு முன்னர் இந்தப் பத்தியிலும் தெரிவித்திருந்தோம்.

அதனால்தான் என்று நாம் சொல்லப்போவதில்லை, ஆனால், திடீரென்று நித்திரையிலிருந்து எழும்பியதுபோல தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியினர் தமது மத்திய குழுவைக் கூட்டி இன்றைய நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்ததுடன், அடுத்த வருடம் நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தரப்பிலிருந்து ஒரு பொது வேட்பாளரைக் களம் இறக்குவதென்றும் முடிவெடுத்திருக்கின்றனர்.

பொதுவேட்பாளரை களமிறக்கும் முயற்சியை கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் சில அரசியல் மதியுரைஞர்கள் குழு ஒன்று முயற்சி செய்ததும் அது தோல்வியில் முடிந்ததும் நாம் மறந்துவிட்டவை அல்ல. ஆனால், அவர்கள் அப்படியொரு முயற்சியை எடுத்தபோது அது சரியான முயற்சி என்று நாமும் பாராட்டியிருந்தோம். அந்த முயற்சியில் இறங்கியவர்கள் மிகக்குறுகியகால இடைவெளியில் அதனை ஆரம்பித்தது தான் அந்த முயற்சி வெற்றிபெறாமல்போனதற்கு முக்கிய காரணம் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இன்று மீண்டும் ஒரு ஜனாதிபதி தேர்தலை நாம் எதிர்கொள்ளவிருக்கின்றோம். அதுவும் தெற்கில் ஒரு பலமான வேட்பாளர் ஒருவர் இதுவரை காணப்படாத நிலையில் பல வேட்பாளர்கள் களம் இறங்கலாம் என்று ஆரூடம் கூறப்படும் நிலையில் சிறுபான்மையினரின் வாக்குகள் அடுத்த தேர்தலில் வெற்றியைத் தீர்மானிக்கின்ற வாக்குகளாக இருக்கும் என்று நம்பப்படுகின்ற ஒரு சூழலில் இந்த தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயம் பலரின் கவனத்தையும் பெற்றிருக்கின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் ஊர்க்குருவியும் இந்தப் பத்தியில் அப்படியொரு யோசனையை முன்வைத்ததுடன் அதற்கு பொருத்தமான வேட்பாளர் சம்பந்தன் ஐயாதான் என்றும் எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

தந்தை செல்வா எப்படி தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு தமிழீழம்தான் என்பதை கூறிவிட்டு அதற்காக மக்கள் ஆணையைப் பெறுகின்ற வகையில் தேர்தல் ஒன்றைச் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தாரோ, அதேபோல தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை சமஷ்டி கட்டமைப்பைக் கொண்ட ஓர் அமைப்பு முறைதான் என்பதை ஒரு தேர்தல் மூலம்- அதாவது ஒரு மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு போல இந்த ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்த வேண்டும் என்றும், சம்பந்தன் காலத்தில் தீர்வு சாத்தியமாகாது விட்டாலும் அவர் காலத்தில் தமிழ் மக்களின் விருப்பத்தை உலகறியச் செய்கின்ற வகையில் இந்த ஜனாதிபதி தேர்தலை அவர் பயன்படுத்த வேண்டும் என்றும் அப்போது இந்தப் பத்தியில் எழுதியிருந்தோம்.

இப்போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு- அதிலுள்ள ஐந்து கட்சிகளின் தலைவர்கள்கூடி அத்தகைய முடிவை எடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

ஆனால், அவர்கள் அந்த முடிவை செயல்படுத்துவதை நோக்கி அர்த்தபுஷ்டியுடன் பயணிக்கவேண்டும். அதற்கு தமிழ்த் தேசிய பரப்பில் இருக்கும் அனைத்துக்கட்சிகளின் ஆதரவையும் பெற முயற்சிக்க வேண்டும்.

முக்கியமாக தமிழரசுக் கட்சியையும் அதன் பெருந்தலைவர் இரா. சம்பந்தனையும் அணுகி அவரின் சம்மதத்தைப் பெற முயற்சிக்கவேண்டும்.

அவர் போட்டியிட விரும்பவில்லை என்றாலும் அவர் சம்மதத்துடன் ஒருவரை வேட்பாளராக தெரிவுசெய்ய வேண்டும்.

அவர் போட்டியிடுவது இந்த நாட்டின் ஜனாதிபதியாக தெரிவாவதற்காக அல்ல தமிழ் மக்கள் தமது பிரச்னைகளுக்கு தீர்வாக இந்த நாடு ஒரு சமஷ்டி கட்டமைப்பின் கீழ் இருக்க வேண்டும் என்பதை இந்த தேர்தல் மூலம்- அதாவது இந்த ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்களின் கருத்துக்கணிப்பாகக் கொண்டு தேர்தலை தமிழ் மக்கள் எதிர்கொள்ளவேண்டும்.

அவ்வாறு பொதுவேட்பாளர் களம் இறங்கும் நிலை வரும்போது, தமிழ் மக்களின் வாக்குகளுக்காக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் எம்மை- எமது வேட்பாளரை நாடி வருகின்ற ஒரு நிலைமை ஏற்படலாம். அதனை எமக்கு சாதகமாக எப்படி பயன்படுத்தலாம் என்பதை யோசிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த யோசனையை வழமைபோல தமிழ் அரசியல் கட்சிகள் வெறுமனே கடந்து செல்லக்கூடாது.

-ஊர்க்குருவி.

## கடந்த எட்டு வருடங்களில் பெரும் நட்டத்தை சந்தித்த இலங்கை ரயில்வே திணைக்களம்!

கொழும்பு, ஒக். 03

இலங்கை ரயில்வே திணைக்களம் கடந்த எட்டு வருடங்களில் 297.64 பில்லியன் ரூபாயை செலவிட்டு இருப்பினும் 52.19 பில்லியன் ரூபாயை மாத்திரமே வருமானமாக ஈட்டியுள்ளதாக அதன் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதன்படி, கடந்த 2015ஆம் ஆண்டு முதல் கடந்த 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை ரயில்வே திணைக்களத்துக்கு 245.45 பில்லியன் ரூபாய் நாட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, கடந்த 2021ஆம் ஆண்டு ரயில்வே திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்ட மொத்த செலவினம் 40.41 பில்லியன் ரூபாயாக காணப்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டில் இலங்கை ரயில்வே திணைக்களத்தின் செலவினம் 42.53 பில்லியன் ரூபாயாக காணப்பட்டுள்ளது.

அதாவது ஒரு வருட காலப்பகுதிக்குள் 2.12 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், கடந்த எட்டு ஆண்டுகளில் இலங்கை ரயில்வே திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்ற வருமானத்துடன் ஒப்பிடும் போது, மொத்த செலவினமானது வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது எனவும் கணக்கு தகவல்களை ஆலோசிக்கும் போது இது தெளிவாகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## சிறிலங்கன் விமானங்களை புறக்கணிக்க வேண்டாம்!

### அமைச்சர் நிமால் கோரிக்கை

கொழும்பு, ஒக். 03

சரியான நேரத்தில் புறப்பட முடியவில்லை என்பதற்காக சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான விமானங்களை புறக்கணிக்க வேண்டாம் என கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.



சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவையின் பல விமானங்கள் தாமதமாக புறப்படுவதால் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சிறிலங்கன் விமானங்கள் புறப்படுவதில் தாமதம் ஏற்படுவதால், பயணிகளை மாற்று விமானங்களை பயன்படுத்துமாறு கூற வேண்டிய நிலை ஏற்படும். விமான தாமதம் குறித்து அதிகாரிகளும் முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

எவ்வாறாயினும், சில அதிகாரிகளின் கோரிக்கைக்கு அமைய சம்பள அதிகரிப்பை வழங்க முடியாது எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

கடந்த சில நாட்களாக சிறிலங்கன் எயார்லைன் ஸுக்குச் சொந்தமான விமானங்கள் தாமதமாகவே புறப்படுகின்றன. இதற்கான உரிய காரணத்தை விமான நிறுவனம் வெளியிடவில்லை. (அ)

## புத்தூரில் வாள்வெட்டு; இளைஞர் காயம்!

யாழ்ப்பாணம், ஒக். 03

யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் இளைஞர் ஒருவர் வாள் வெட்டுக்குள்ளாகி காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் மாலையில் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த இளைஞர் ஒருவரை பிறிதொரு வாகனத்தில் வருகை தந்த சிலர் வழி மறித்துள்ளனர்.

இந்த நிலையில் முச்சக்கர வண்டியில் பயணித்த இளைஞரை வாளால் வெட்டி காயப்படுத்திவிட்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

பலத்த காயங்களுக்கு உள்ளான இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## எட்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் முதியோர் இல்லங்களில் உள்ளனர்

### தேசிய முதியோர் செயலகம் தகவல்

கொழும்பு, ஒக். 03

பராமரிப்பை இழந்த 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் முதியோர் இல்லங்களில் வாழ்ந்து வருவதாக தேசிய முதியோர் செயலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 349 முதியோர் இல்லங்களில் 8,806 முதியவர்கள் இவ்வாறு வாழ்ந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, 5,624 தாய்மார்களும் 3,182 தந்தைமார்களும் பிள்ளைகள் மற்றும் உறவினர்களின் பராமரிப்பு இன்றி முதியோர் இல்லங்களில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் மாத்திரம் 1,242 முதியவர்கள் முதியோர் இல்லங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் 1,071 முதியவர்களும் வடமேல் மாகாணத்தில் 809 முதியவர்களும் சமரகமுவ மாகாணத்தில் 789 முதியவர்களும் வடமாகாணத்தில் 756 முதியவர்களும் இவ்வாறு இல்லங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

மேலும், 70 வயதிற்கும் மேற்பட்ட 416,667 பேர் முதியோர் உதவித்தொகையை பெறுவதாக தேசிய முதியோர் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், புற்றுநோய், சிறுநீரகம் மற்றும் இதய நோயினால் பாதிக்கப்பட்ட முதியவர்களுக்கு அதிகபட்சமாக 25,000 ரூபாவிற்கு உட்பட்ட நிதிவசதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக மட்டத்தில் முதியவர்களின் உளநல மேம்பாட்டுக்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
03.10.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பௌத்தம் அனைவருக்குமானது என்றால்...!

பௌத்த மதம் சிங்களவர்களுக்கானது மட்டுமல்ல - அது அனைவருக்குமானது. இவ்வாறானதொரு கருத்தை மனோ கணேசனுடனான சந்திப்பின்போது தேரர் ஒருவர் தெரிவித்தாரென செய்தியொன்று வெளியாகியிருந்தது. இந்த சந்திப்பில், கடும்போக்குவாதியாக அடையாளம் காணப்படும் - குருந்தூர்மலை விவகாரத்தில் கடுந்தொனியில் பேசிக்கொண்டிருக்கும் உதய கம்மன்பிலவும் பங்குகொண்டிருக்கின்றார். ஒரு காலகட்டத்தில் பௌத்த மதத்தை தமிழர்களும் பின்பற்றியிருக்கின்றனர். இந்த வரலாற்றை எவராலும் மறுதலிக்க முடியாது.

வடக்கு - கிழக்கிலுள்ள பிரதான விகாரைகள் அனைத்துமே தமிழ் மக்களால் பின்பற்றப்பட்ட பௌத்தத்தின் எச்சங்கள்தான். இந்தியாவில் பௌத்த மதம் வீழ்ச்சியுற்று இந்து மதம் எழுச்சியடைந்த பின்னணியில் இலங்கையிலும் தமிழ் மக்கள் மத்தியில் பௌத்த வழிபாடு சுருங்கத் தொடங்கியது. ஒரு கட்டத்துடன் பௌத்தத்தை பின்பற்றும் தமிழர்கள் இல்லையென்னும் நிலை உருவாகியது. இவ்வாறானதொரு பின்னணியில்தான், பௌத்தமென்றால் அது சிங்களவர்கள் மட்டும்தான் - என்னும் புரிதல் வளர்ச்சியுற்றது.

இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் பௌத்தத்தை தங்களின் விடுதலைக்கான திறவுகோலாக பார்க்கும் போக்கொன்றும் இருந்தது. ஆனால், அது பெருமெடுப்பிலான சிந்தனையாக வளர்ச்சியுறவில்லை. இந்து மதம் சாதியை பேணிப்பாதுக்காக்கின்றது - ஆனால், பௌத்தமோ மனிதர்களை சமத்துவமாக நடத்துகின்றது - என்னும் பார்வை இப்போதும் முற்போக்காளர்கள் மத்தியில் உண்டு. தமிழ்நாட்டின் ஈழ விடுதலை ஆதரவாளர்கள் சிலர் பௌத்தத்தை தாழ்த்தப்பட்டவர்களுக்கான விமோசனமாக நோக்கும் பார்வையை இப்போதும் முன்வைப்பதை காணலாம். ஆனால், இலங்கையின் அரசியல் அனுபவமோ வேறாக இருக்கின்றது.

தென்னிலங்கையின் அதிகார அரசியலும் பௌத்தமும் ஒன்றிலிருந்து ஒன்றை பிரிக்க முடியாதளவுக்கு பின்னிப்பிணைந்திருக்கின்றன. இந்தப் பின்னணியில்தான் புத்த பிக்குகள் சட்டத்துக்கும் அப்பாற்பட்டவர்களாக நோக்கப்படுகின்றனர். விகாரைகளின் மூலம் அவர்கள் தனியானதோர் அதிகார கட்டமைப்பாக எழுச்சியுற்றிருக்கின்றனர். இந்த அனுபவத்திலிருந்து நோக்கும்போது பௌத்தம் சிங்களவர்களுக்கான ஒன்றாக மட்டுமே இருக்கின்றது.

அவ்வாறு இல்லையென்றால், சிங்கள மக்களே இல்லாத இடங்களில் எதற்காக பௌத்த விகாரைகள் கட்டப்படுகின்றன. பௌத்தம் சிங்களவர்களுக்கானது மட்டுமல்ல - அது தமிழ் மக்களுக்கானதும்தான் என்பதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், பௌத்தம் நடைமுறையில் தமிழ் மக்களால் ஓர் ஆக்கிரமிப்பின் குறியீடாகவே நோக்கப்படுகின்றது. தமிழ் மக்கள் மத்தியில் பௌத்தமதம் தொடர்பிலான நன்மதிப்பு ஏற்பட வேண்டுமாயின் - முதலில் தேவையற்ற வகையில் விகாரைகள் கட்டப்படுவது நிறுத்தப்பட வேண்டும். விகாரைகளை அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்தும் போக்கு மாற வேண்டும். அவ்வாறானதொரு சூழல் ஏற்பட்டால் மட்டுமே பௌத்தம் சிங்களவர்களுக்கானது மட்டுமல்ல என்னும் சிந்தனை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படும். இந்த விடயத்தைத்தான் மனோ கணேசன் போன்றவர்கள் தெற்கிலுள்ளவர்களுக்கு வலியுறுத்த வேண்டும்.

# வரிகள் நீக்கப்படுமானால் பால்மா விலை குறையும்!

## இறக்குமதியாளர்கள் உறுதி

*கொழும்பு, ஒக். 03*

பால் மா இறக்குமதி நடவடிக்கையின் போது 600 முதல் 650 ரூபாய் வரை வரியாக செலுத்த வேண்டியுள்ளது என இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக கொழும்பு துறைமுகத்துக்கு கொண்டுவரப்படும் பால்மாவின் விலை சுமார் 1,100 ரூபாயாக காணப்படுகிறது என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த வரி நீக்கப்படும் நிலையில் பால்மா பைக்கெற் ஒன்றினை 600 முதல் 650 ரூபாய்க்கு இடைப்பட்ட விலையில் பொதுமக்களுக்கு வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கு 10 வீதம் புதிய வரியை விதிப்பதற்கு வர்த்தக அமைச்சு அண்மையில் தீர்மானம் மேற்கொண்டது.

இதன்படி, ஒரு கிலோகிராம் பால்மாவை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் போது 225 ரூபாய் வரியாக செலுத்தப்படுவதாக லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், பெறுமதி சேர் வரி (வற்) 165 ரூபாய், சமூக பாதுகாப்பு வைப்புத் தொகை 55 ரூபா மற்றும் விமான சேவைகள் வரி 122 ரூபாவும் அறவிடப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, பால்மா கிலோ ஒன்றுக்கு மொத்தமாக 567 ரூபா வரியாக செலுத்தப்படுகிறது.

குறித்த வரிகள் நீக்கப்படும் நிலையில் இரண்டு கோடி மக்களுக்கு குறைந்த விலையில் பால்மா பைக்கெற்றுகளை வழங்க முடியும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கையில் நிபா வைரஸ் ஆபத்து குறைவாகவே உள்ளது

*கொழும்பு, ஒக். 03*

இந்தியாவின் கேரளாவில் பரவி வரும் நிபா வைரஸ் தொடர்பில் நாட்டுக்கு குறைந்தளவு ஆபத்து இருப்பதாக இலங்கை சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் அறிக்கையின்படி, இந்திய மாநிலமான கேரளாவில் இதுவரை ஆறு நிபா வைரஸ் தொற்றாளர்கள் மட்டுமே பதிவாகியுள்ளன.

கேரளாவில் கடந்த ஓகஸ்ட் மாத இறுதியில் இருந்து பாதிக்கப்பட்ட நபர்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன், வைரஸ் தெற்று காரணமாக இருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், செப்ரெம்பர் 22 ஆம் திகதிக்குப் பிறகு இந்தியாவில் புதிய தொற்றாளர்கள் எதுவும் கண்டறியப்படவில்லை.

பாதிக்கப்பட்ட நோயாளிகளுடன் தொடர்பில் இருந்ததாக சந்தேகிக்கப்படும் 700இற்கும் மேற்பட்டோர் இந்தியாவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் நிபா வைரஸைக் கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் நோய் பரவல் குறைக்கப்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் துறை தெரிவித்துள்ளது.

இதனால், இலங்கைக்கான ஆபத்து மிகவும் குறைவு பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என சுகாதார அமைச்சு உறுதியளித்துள்ளது.

நிலைமை உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், தேவையான நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)


# மகாத்மா காந்தியின் பிறந்த நாள் அலரி மாளிகையில் விசேட நிகழ்வு

*கொழும்பு, ஒக். 03*

மகாத்மா காந்தியின் 154ஆவது பிறந்த நாளை முன்னிட்டு பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் இந்திய தூதுவர் கோபால் பாக்லே ஆகியோர் நேற்று அலரி மாளிகையில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

பிரதி தூதுவர் சத்தியஞ்சல் பாண்டே மற்றும் ஏனைய இராஜதந்திரிகள், பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன மற்றும் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒக்ரோபர் - 03 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாதி 16
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : பஞ்சமி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்ன கவலைகள் வந்து போகும். வளைந்து கொடுத்துப் போவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வந்துப் போகும். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினரிடன் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். மதிப்புக் கூடும் நாள்.

**கடகம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை வெளியிட வேண்டாம். போராட்டமான நாள்.

**துலாம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமடைவீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். சவாலான வேலை களையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**தனுசு**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விடலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

# ஒரு இலட்சம் முஸ்லிம் இளைஞர்களை மூளைச்சலவை செய்ய திட்டமிட்டோம்!

## கோவை கார் குண்டுவெடிப்பு குற்றவாளி வாக்குமூலம்

சென்னை, ஒக். 03

'பயங்கவராத செயலில் ஈடுபடுவதற்கு ஒரு இலட்சம் முஸ்லிம் இளைஞர்களை மூளைச்சலவை செய்வது என்று செயல் திட்டம் வகுத்து இருந்தோம்' - இவ்வாறு கோவை கார் குண்டு வெடிப்பு குற்றவாளி வாக்குமூலம் அளித்துள்ளார்.

கோவையில் கோட்டை ஈஸ்வரன் கோவில் அருகே கடந்த ஆண்டு ஒக்ரோபர் 23ஆம் திகதி காரில் சிலிண்டர் வெடித்தது. இது தாக்குதல் ஒன்றுக்கான திட்டமிடலாக அமைந்தது. இதில், ஜமேஷா முபின் என்பவர் பலியானார். இவர் ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாத அமைப்பை சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில், தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகளின் விசாரணையில் 12 பேர் கைதாகினர். இவர்களில் முகமது இத்ரீஸ், முகமது அசாருதீன் ஆகியோரை அதிகாரிகள் மறித்து வைத்து விசாரித்தனர்.

இதன்போது அவர்கள் அளித்த வாக்குமூலத்தில், ஜமேஷா முபின், வெடிகுண்டு தயாரிக்க எங்களுக்கு பயிற்சி அளித்தார். கோவை குனியமுத்தாரில் உள்ள, அரபி கல்லூரியை எங்கள் பயங்கரவாத பயிற்சி வகுப்புக்கு பயன்படுத்திக் கொண்டோம்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனப்பகுதியில் இரகசிய கூட்டம் நடத்துவோம். அங்கு தான் துப்பாக்கிச்சூடு உள்ளிட்ட ஆயுத பயிற்சிகளை எடுத்தோம்.

சமூக வலைதளம் வாயிலாக, இந்து மதம் மற்றும் அதன் தலைவர்களுக்கு எதிரான கருத்துகளுடன் இருக்கும் முஸ்லிம் இளைஞர்களுக்கு வலை விரித்தோம். அவர்களிடம் இனம் புரியாத வேகம் இருக்கும். அதை, நாங்கள் பயன்படுத்திக் கொண்டோம். ஓராண்டில் ஒரு இலட்சம் முஸ்லிம் இளைஞர்களை மூளைச்சலவை செய்ய வேண்டும் என்ற இலக்குடன் பணிபுரிந்து வந்தோம்.

கோவை கோட்டை ஈஸ்வரன் கோவில் மீது, ஜமேஷா முபின் நடத்திய தாக்குதல் தோல்வியில் முடிந்து விட்டது. அது, வெற்றி பெற்றிருந்தால், அடுத்தடுத்த தாக்குதலுக்கு தயார் நிலையில் இருந்திருப்போம் - என்று கூறினர் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# திருக்குறளை கற்பதற்காக காந்தி தமிழனாக பிறக்க விரும்பினார்!

## சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி

சென்னை, செப். 03

"திருக்குறளை கற்பதற்கு அடுத்த பிறவியில் தமிழனாக பிறக்க காந்தியடிகள் விரும்பினார்," என்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சுரேஷ்குமார் பேசினார்.

சென்னையில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன்,

வள்ளலார், 9 வயது முதல் ஆன்மிக உரை நிகழ்த்தினார். அவர், சைவ நெறியாளர். அவரின் அருட்பா பாடல்கள், அதை மெய்ப்பிக்கும். அவர், அறநெறியை இறைநெறியின் வாயிலாக வலியுறுத்த, தன் இறுதி காலத்தில் சன்மார்க்கத்தை வலியுறுத்தினார்.

கொல்லாமை, புலால் உண்ணாமை, மது அருந்தாமை எனும் கொள்கைகளை வலியுறுத்தி வள்ளுவர் வாழ்ந்தார். அதே கொள்கைகளை தன் வாழ்வில் கடைப்பிடித்தவர்கள் வள்ளலாரும், காந்தியடிகளும்.

காந்தி, தென்னாபிரிக்காவில் ஹிந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் பத்திரிகை நடத்தினார். ஆனாலும், திருக்குறள் கருத்துகளை முழுமையாக விளங்கிக்கொள்ள அவரால் முடியவில்லை. அதனால், அடுத்த பிறவியிலாவது தமிழனாக பிறந்தோ அல்லது முழுமையாக தமிழ் கற்றோ, திருக்குறளை முழுதும் அறிய வேண்டும் என பதிவு செய்துள்ளார் - என்று கூறினார்.

(ஐ)

# அனுசரித்து போகும் அரசியல் என்னிடம் எப்போதும் கிடையாது!

## பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை



கோவை,செப். 03

"என்னிடம் எப்போதும் அனுசரித்து போகும் அரசியல் கிடையாது," என, தமிழக பா. ஜ., தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

கோவையில் இருந்து டில்லி செல்லும் முன், விமான நிலையத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கூட்டணி முறிவு குறித்து, அறிக்கை கொடுக்க டில்லி செல்லவில்லை. யாத்திரையில் என்ன நடக்கிறது, எவ்வளவு ஆதரவு கிடைத்துள்ளது என்பது குறித்து விளக்கம் அளிக்கவே டில்லி செல்கிறேன். கூட்டணி குறித்து தலைவர்கள் சரியான நேரத்தில் பேசுவர்.

அரசியலில் என்னுடைய கருத்துகளை எப்போதும் விட்டுக் கொடுக்க மாட்டேன். மோடி போன்ற இன்னொரு தலைவர் வரமாட்டார் என்பதால், அவருக்காக அரசியலில் உள்ளேன். அண்ணாமலையிடம் அனுசரித்து போகும் அரசியல் எப்போதும் கிடையாது. எந்த கட்சியை பற்றியும் நான் உயர்த்தியோ, தாழ்த்தியோ பேசவில்லை.

கம்யூனிஸ்ட் இயக்கம் தி.மு.கவை புகழ்வதற்கு, ஆதரித்து பேசுவதற்கான இயக்கமாகி விட்டது. பாலகிருஷ்ணன், கம்யூனிஸ்ட் இயக்க கொள்கை, சித்தாந்தத்துக்கு ஒரு கரும்புள்ளி. தமிழக பா.ஜ. கவுக்கு தேவை ஒரே ஒரு தேர்தல். 25 சதவீத வாக்கை தாண்டி விட்டது என காட்டிவிட்டால், தமிழகத்தின் அரசியல் தலைகீழாக மாறிவிடும். மிக தூய்மையான அரசியல் கட்சியாக பா. ஜ. க. இருப்பதால், பா. ஜ. க. மீது வெறுப்பு இருக்கத்தானே செய்யும் -என்றார்.

(ஐ)

# மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபடவேண்டும்

## ஜனக ரத்நாயக்க கோரிக்கை

கொழும்பு, ஒக். 03

**சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைய சட்டவிரோதமான முறையில் மூன்றாவது தடவையாகவும் மின்கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. ஆகவே, மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.**

**கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

முறையற்ற வகையில் மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சிகளுக்கு நான் தடையாக இருந்த காரணத்தினால் தான் என்னை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து அரசாங்கம் நீக்கியது.

மின்சாரக் கட்டண அதிகரிப்பால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைய மின்சார கட்டணத்தை மீண்டும் 22 முதல் 25 சதவீதம் வரை மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை கடந்த மாதம் 28 ஆம் திகதி பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு யோசனை முன்வைத்துள்ளது.

ஒரு வருடத்தில் இரண்டு முறை மாத்திரமே மின்கட்டணத்தை அதிகரிக்க முடியும்.



அதற்கமைய இந்த ஆண்டு இரண்டு தடவைகள் முறையற்ற வகையில் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. நியாயமற்ற மின்கட்டண அதிகரிப்பால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிற்றுறை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த மக்களும் பொருளாதார நெருக்கடியாலும், வாழ்க்கை சுமை அதிகரிப்பாலும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் மின்கட்டணத்தை அதிகரித்தால் மக்களின் நிலை என்னவாகும் எனபதை ஆட்சியாளர்கள் சிந்தித்து பார்க்கவேண்டும்.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவும் எந்தளவுக்கு சுயாதீனத்துடன் செயற்படும் என்பதும் தற்போது கேள்விக்குள்ளாக்கப் பட்டுள்ளது. ஆகவே, மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிக்கும் அரசாங்கத்தின் முயற்சியை எதிர்த்து ஒட்டுமொத்த மக்களும் போராட்டத்தில் ஈடுபடவேண்டும்-என்றார்.

(அ)



# உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு இரத்ததானம்

வவுனியா, ஒக். 03

149ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு இரத்ததான முகாம் வவுனியா அஞ்சல் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

உதிரம் கொடுப்போம் உயிரை காப்போம் எனும் தொனிப்பொருளில் பிரதம அஞ்சல் அதிபர் லியனகெதர தலைமையில் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

அஞ்சல் உத்தியோகத்தர்கர்கள், பொதுமக்கள், பொலிஸார், மற்றும் இராணுவத்தினர் என பலரும் கலந்துகொண்டு இரத்த தானம் வழங்கினர்.

ஒக்ரோபர் 09 ஆம் திகதி உலக அஞ்சல் தினம் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மதுபானசாலைகள் இன்று பூட்டு

கொழும்பு, ஒக். 03

நாட்டில் உள்ள சகல மதுபானசாலைகள் மற்றும் உணவகங்கள், நட்சத்திர ஹோட்டல்களில் உள்ள மது விநியோக நிலையங்கள் யாவும் இன்று செவ்வாய்க்கிழமை மூடப்படும் என கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

சர்வதேச மது ஒழிப்பு தினம் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் 3ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. அதனையொட்டியே மதுபானசாலைகள் யாவும் மூடப்படுகின்றது என்றும் கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

(அ)

# மடு வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் வெள்ளிவிழாவும் சாதனையாளர் கௌரவிப்பும்





மன்னார், ஒக். 03

மன்னார் மடு வலயக்கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்த வெள்ளி விழா நிகழ்வும் சாதனையாளர்கள் கௌரவிப்பும் நேற்று முன் தினம் ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மடு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி ஏ.கே.வொலன்ரைன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மடு கல்வி வலயத்தில் 2022 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள், க.பொ.த சாதாரண தர பரீட்சையில் 5 ஏ சித்திக்கு மேல் பெற்ற மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு மதிப்பளிக்கபட்டனர்.

மேலும் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் என பலர் கலந்து கொண்டனர்.

# முல்லைத்தீவு நீதிபதிக்கு அச்சுறுத்தல் வெளிப்படையான விசாரணை தேவை

## அநுரகுமார திஸாநாயக்க கோரிக்கை

கொழும்பு, ஒக். 03

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் வெளிப்படைதன்மையுடன் விசாரணை நடத்தப்பட்டு, அதன் பின்புலம் கண்டறியப்பட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் வழங்கப்பட்ட தீர்ப்பை அடிப்படையாகக்



கொண்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் அவர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

நீதிபதி கூறியது உண்மையெனில் நாடு இந்த கட்டத்தில் உள்ளது? தமக்கு சாதகமான தீர்ப்பு வரவில்லை என்பதற்காக நீதிபதிக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுமானால் நாட்டில் சட்டத்தின் ஆட்சி எப்படி நிலவும்?

எனவே, மேற்படி சம்பவம் தொடர்பில் உண்மையை கண்டறியும் வெளிப்படை தன்மையுடனான விசாரணை அவசியம். அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதா, ஆமெனில் அது யாரால் விடுக்கப்பட்டது, இல்லையெனில் அதன் பின்னணியில் உள்ள சூழ்ச்சி என்ன என்பது கண்டறியப்பட வேண்டும்-என்றார்.

# தேசிக்காய் விலை உயர்வு

கொழும்பு, ஒக். 03

இலங்கையில் ஒரு கிலோ தேசிக்காயின் விலை 2100 ரூபாவாக உயர்வடைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, மலையகத்தின் பல பகுதிகளில் தேசிக்காய் ஒன்றின் விலை சுமார் 50 ரூபாவை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விலைக்கு தேசிக்காய்களை கொள்வனவு செய்து, விற்பனை செய்ய முடியவில்லை என வர்க்கர்கள் தெரிவித்துள்ளனர்.

ஊவா மற்றும் வரட்சியுடனான பகுதிகளிலேயே தேசிக்காய் செய்கை அதிகளவில் முன்னெடுக்கப்படுகின்றது.

தேசிக்காய் அறுவடை குறைந்துள்ளமையே, விலை அதிகரிக்க காரணம் என தகவல் வெளியாகியுள்ளது.

(அ)

# சீரற்ற காலநிலையினால் 3,672 குடும்பங்கள் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 03

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 3 ஆயிரத்து 672 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 496 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழை, வெள்ளம் மற்றும் மண் சரிவால் ஒரு வீடு முழுமையாகவும், 376 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

37 குடும்பங்களைச் சேர்ந்த 147 பேர் 3 பாதுகாப்பு மத்திய நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

(அ)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசு உடனடியாக மீள பெறவேண்டும்!

## வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.



**கொழும்பு, ஒக். 03**

**“பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டமூலம் என்பவற்றை அரசு உடனடியாக மீளப்பெற வேண்டும்.” - என்று வலியுறுத்தியுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். அத்துடன், நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் இடித்துரைத்தார்.

இது தொடர்பில் விஜித ஹேரத் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

அச்சுறுத்தல் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி பதவி விலகியுள்ள விடயம் பாரதூரமான விடயமாகும்.

இது தனி நபர் ஒருவருக்கு எதிரான அச்சுறுத்தல் அல்ல, மாறாக ஒட்டு மொத்த நீதித்துறைக்கும் விழுந்த அடியாகும்.

எனவே, மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு, அந்த அச்சுறுத்தலை விடுத்தது யார் என்பது உள்ளிட்ட உண்மை நிலை கண்டறியப்பட்டு, நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் ஏனைய நீதிபதிகளுக்கும் தற்துணிவுடன் செயற்படும் தமது பணியை முன்னெடுக்க நம்பிக்கை வரும். நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும்.

மக்களை அச்சுறுத்தல்மூலம் ஒடுக்க முற்படும் அரசின் முயற்சிகளை நாம் தோற்கடிப்போம். எனவே, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டமூலம் என்பன மீளப்பெறப்பட வேண்டும்.-என்றார். (அ)

# குழந்தையின் இறப்பு தொடர்பில் பொலிஸ் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஒக். 03

ஊருபொக்க கட்டுவன பகுதியில் 6 மாதக் குழந்தை உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் மாலை, தாயின் கையில் இருந்த குழந்தையின் தலை சுவரில் மோதி விபத்துக்குள்ளானதால், மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது அது உயிரிழந்தது.

நேற்று முன் தினம் மாலை தாயார் குழந்தையை வெந்நீரில் குளிப்பாட்டிக் கொண்டிருந்த போது வளர்ப்பு நாய் தாயின் காலை பிடித்து இழுத்ததில் குழந்தையின் தலை சுவரில் மோதியதாகக் கூறப்படுகிறது.

அப்போது வீட்டில் குழந்தையும் தாயும் மட்டுமே இருந்தனர்.

அந்த சம்பவத்துக்குப் பிறகு, குழந்தையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. சாதாரணமாகவே இருந்ததாக கூறப்படுகின்றது.

குழந்தையின் தாயார் இது தொடர்பில் தனது கணவருக்கு தொலைபேசியில் தெரிவித்துள்ளார்.

பின்னர் மாலையில் கணவர் வந்து குழந்தையிடம் பேசி சிறிது நேரம் கழித்து குழந்தையின் மூக்கில் இரத்தம் கசிவதைப் பார்த்துள்ளார். தலை சுவரில் மோதிய பகுதி நீல நிறமாக மாறியதன் காரணமாக குழந்தையை ஹெய்கொட பிராந்திய வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மாத்தறை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டபோதிலும் வெள்ளம் காரணமாக வலஸ்முல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குழந்தை உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

# பஸ் கட்டணம் அதிகரிக்கும்?

கொழும்பு, ஒக். 03

டீசல் விலை அதிகரிப்பு காரணமாக தனியார் பஸ் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் அனுமதி வழங்கவேண்டும் என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பஸ் கட்டணத்தை குறைந்தது 5 வீதம் அதிகரிக்கவேண்டும் என சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் வலியுறுத்தினார்.

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# லிட்ரோ எரிவாயு விலையில் மாற்றம்?

கொழும்பு, ஒக். 03

லிட்ரோ எரிவாயுவின் விலை நாளை திருத்தம் செய்யப்பட வாய்ப்புள்ளதாக நிறுவனத்தின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எரிவாயு விலைச் சூத்திரத்தின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் 5ஆம் திகதி எரிவாயுவின் விலை திருத்தம் செய்யப்படலாம். செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி 12.5 கிலோ கிராம் வீட்டு எரிவாயு சிலிண்டரின் விலை 145 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோ சிலிண்டர் ரூ.3,127 ஆகவும், 5 கிலோ சிலிண்டர் ரூ.1,256 ஆகவும், 2.3 கிலோ சிலிண்டர் ரூ.587 ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது.

# வங்கி பாதுகாப்பு பெட்டகத்தை உடைத்து நகைகள் கொள்ளை

கொழும்பு, ஒக். 03

வென்னப்புவ. வாய்க்கல அங்கம்பிட்டிய பிரதேசத்தில் உள்ள கிராமிய வங்கிக்குள் புகுந்த கொள்ளைக் கும்பல் வங்கியின் பெட்டகத்தை உடைத்து சுமார் 7 கோடி ரூபா பெறுமதியானஅடகு வைக்கப்பட்ட தங்கநகைகளை திருடிச் சென்றுள்ளதாக வென்னப்புவ தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தங்கநகைகள் திருடப்பட்டமை தொடர்பில் கிராமிய வங்கியின் முகாமையாளர் வென்னப்புவ தலைமையக பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் 27ஆம் திகதி பிற்பகல் 1.45 மணியளவில் வங்கி மூடப்பட்டிருந்த நிலையில், மீண்டும் செப்ரெம்பர் 30ஆம் திகதி காலை 8.30 மணியளவில் வங்கி திறக்கப்பட்டபோது பெட்டகம் உடைக்கப்பட்டிருந்தமை தெரியவந்ததாக அதன் முகாமையாளர் பொலிஸ் முறைப்பாட்டில் கூறியுள்ளார்

நீண்ட வார விடுமுறையை இலக்கு வைத்து இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

வங்கியின் ஜன்னலை அறுத்து அதன் வழியாக உள்ளே நுழைந்து பாதுகாப்பு அறையில் இருந்த பெட்டகத்தை இயந்திரங்கள் மூலம் அறுத்து தங்க நகைகளை திருடிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிரைண்டர் இயந்திரம் மூலம் பெட்டகமும் வெட்டப்பட்டது. தரையில் தேய்ந்துபோன எட்டு பிளேடுகளை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

இந்த கிராமிய வங்கியில் உள்ள 26 பாதுகாப்பு அறைகள் உள்ளதாகவும், 7 அறைகள் திருடர்களால் சோதனையிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வங்கியில் சி.சி.ரி.வி கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும், அவற்றின் டி.வி.ஆரும் திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் காரணமாக, வங்கியைச் சுற்றியுள்ள வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி கமெராக்களின் காட்சிகளை ஆய்வு செய்து சந்தேக நபர்களை அடையாளம் காணும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்துக்குள் இரகசியமாக நுழைந்த தமிழர் கைது!

கொழும்பு, ஒக். 03

கட்டுநாயக்க விமான நிலையத்திற்குள் இரகசியமாக பிரவேசித்து ஜப்பானுக்கு பயணத்தை ஆரம்பிக்கவிருந்த விமானத்தில் ஏறி அமர்ந்த நிலையில் கைது செய்யப்பட்ட நபர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு நீர்கொழும்பு பதில் நீதவான் இந்திக சில்வா உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வத்தளை, ஹெந்தலையைச் சேர்ந்த ஏ.பி.சுதாகர் இந்திரஜித் என்பவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஜப்பானில் சில காலம் பணியாற்றிய பின்னர் திருமணம் செய்து கொள்வதற்காக இலங்கைக்கு வந்தவர் எனவும், பின்னர் ஜப்பான் செல்வதாக மனைவியிடம் கூறிவிட்டு நேற்று முன்தினம் வீட்டை விட்டு வெளியேறியவர் எனவும் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் ஜப்பான் செல்வதற்கான ஆவணம் எதுவும் இருக்கவில்லை எனவும் பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# மருத்துவமனைகள் மூடப்படும் அபாயம்



கொழும்பு, ஒக். 03

நாட்டில் சிக்கலான சூழ்நிலையில் இயங்கிவரும் பல மருத்துவமனைகள், கிராமப்புற மருத்துவமனைகள் மற்றும் மத்திய மருந்தகங்கள் அடுத்த இரண்டு வாரங்களில் மூடப்படும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மீதமாக இருக்கவேண்டிய மருத்துவர்களின் எண்ணிக்கையை விட குறைவாக உள்ள வைத்தியசாலைகள், மருந்துகள் இல்லாத வைத்தியசாலைகள், ஆய்வக பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாத வைத்தியசாலைகளில் வைத்தியர்களை தங்க வைப்பதில் பயனில்லை என சங்கத்தின் செயலாளர் ஹரித அளுத்கே சுட்டிக்காட்டினார்

மூடப்படும் அபாயத்தில் உள்ள சிறிய மருத்துவமனைகள் குறித்து அடுத்த இரு வாரங்களில் சிறப்பு ஆய்வு நடத்தப்பட்டு தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு அறிவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# தீ பற்றி எரிந்தது ஓட்டோ

கொழும்பு, ஒக். 03

கம்பளை ஆதார வைத்தியசாலைக்கு அருகில் முச்சக்கர வண்டி ஒன்று திடீரென தீ பிடித்து எரிந்துள்ளது.

கம்பளையில் இருந்து நாவலப்பிட்டி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போதே குறித்த முச்சக்கரவண்டி தீ பற்றி எரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது குறித்த பகுதி மக்கள் உடனடியாக தீயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீயினால் முச்சக்கரவண்டி பகுதியளவில் தீக்கரையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இணையத்தள பாதுகாப்புச் சட்டத்தை அரசு தவறாக பயன்படுத்தும் சாத்தியம்

## சாலிய பீரிஸ் கவலை



**கொழும்பு, ஒக். 03**
**சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையத்தள பாதுகாப்பு தொடர்பான உத்தேச சட்டமூலத்தை அரசாங்கம் தவறாகப் பயன்படுத்தக்கூடிய சாத்தியம் உள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் கவலை வெளியிட்டுள்ளார்.**

தொலைக்காட்சியொன்றில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட சட்டத்தரணி சாலிய பீரிஸ், முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலம் குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக கட்டுப்பாடுகளை விதிப்பதில் அதிக கவனம் செலுத்துவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சமூக வலையத்தள பாவனையாளர்கள் மற்றும் இதில் தமது கருத்துகளை சுதந்திரமாக வெளியிடுபவர்களின் கருத்துச் சுதந்திரத்தை உத்தேச சட்டமூலம் கட்டுப்படுத்துவதாக உள்ளது. இந்தச் சட்டமூலம் அரசியல் நோக்கங்களுக்காகவே கொண்டுவரப்படுகிறது.

இந்த விவாதத்தில் கருத்து வெளியிட்ட சிரேஷ்ட ஊடகவியலாளரும் விஞ்ஞான எழுத்தாளருமான நாலக குணவர்தன,

“உத்தேச சட்டமூலம் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதாக உள்ளது. கடந்த 75 வருடங்களாக ஏற்பட்டுள்ள பிழைகளை திருத்துவதற்கு இலங்கை நாடு முயற்சித்தால் அதற்கு வலுவான ஜனநாயகத்தையே நாம் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது“ எனக் கூறியுள்ளார்.

உத்தேச சட்டமூலத்தின் ஊடாக சமூக வலையத்தளங்களை கட்டுப்படுத்துவது மாத்திரமல்ல அரசாங்கத்தின் நோக்கம். வணிக இணையத்தளங்கள் முதல் ஒட்டுமொத்த இணையத்தள வலையமைப்பையும் கட்டுப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளதாகவும் நாலக குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார். (அ)

# துமிந்த நாகமுவ, ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட சிலருக்கு தடை உத்தரவு

கொழும்பு, ஒக். 03
துமிந்த நாகமுவ, ஜோசப் ஸ்டாலின், தம்மிக முனசிங்க உள்ளிட்டோர் நேற்று கொழும்பின் சில இடங்களுக்குள் பிரவேசிப்பதை தடுத்து கோட்டை நீதவான் உத்தரவு பிறப்பித்தது.

கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நீதிமன்றத்தில் முன்வைத்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் சந்ரஜித், அனைத்து பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கல்வெவ சிறிதம்ம தேரர், தொழிலாளர் போராட்ட மத்திய நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் துமிந்த நாகமுவ, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 08 பேர் மற்றும் அவர்களுடன் வருகை தருவோர் நேற்றுக் காலை 11 மணி முதல் மாலை 06 மணி வரையான காலப்பகுதியில் கொழும்பின் சில பகுதிகளுக்குள் பிரவேசிப்பதை தடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகம், பித்தளைச் சந்தி முதல் என்.எஸ்.ஏ சுற்றுவட்டம், எஸ்.ஏ சுற்றுவட்டம் முதல் பாலதக்ஷ மாவத்தை வரையிலான பகுதி ஆகிய இடங்களுக்குள் பிரவேசிப்பதை தடுத்து இவ்வாறு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த பகுதிகளுக்குள் உள்நுழைவதைத் தவிர்க்குமாறும் பொதுச் சொத்துகள் மற்றும் தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பதைத் தவிர்க்குமாறும் பொதுமக்களைத் தூண்டும் வகையில் வன்முறை செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் எனவும் குறித்த உத்தரவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# பள்ளிமுனை மீனவரின் மீன்பிடி உபகரணங்கள் கற்பிட்டியில் மீட்பு!



மன்னார், ஒக். 03
மன்னார் பள்ளிமுனை மீனவர் ஒருவரின் மீன் வாடியில் இருந்து திருடிச் செல்லப்பட்ட சுமார் 9 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒரு தொகுதி மீன்பிடி உபகரணங்களை மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று முன் தினம் கற்பிட்டியில் வைத்து மீட்டதோடு சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் மீன்பிடி வாடி, பள்ளிமுனை கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது.

குறித்த மீன்பிடி வாடியில் கற்பிட்டியைச் சேர்ந்த குறித்த நபர் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில், அவர் சில தினங்களுக்கு முன் மீன் வாடியில் வைக்கப்பட்டிருந்த படகுகளின் 2 வெளி இணைப்பு இயந்திரங்கள் (எஞ்சின்), அட்டை பிடிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்கள் உட்பட சுமார் 9 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து, வாடியின் உரிமையாளர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன் பின்னர், மன்னார் தலைமையக பொலிஸ் நிலைய பதில் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ராமநாயக்கவின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரணுக்க விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது பொருட்களை திருடிய நபர் கற்பிட்டி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதுடன், அவர் திருடி விற்பனை செய்த பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர் மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டதோடு, மீட்கப்பட்ட பொருட்களும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# நாணய நிதியத்துடனான கலந்துரையாடலில் திறைசேரி செயலாளர் பங்கேற்கவில்லையா?

கொழும்பு, ஒக். 03
கடந்த இரண்டு வாரங்களாக சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலில் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன பங்கேற்கவில்லை என வெளியாகும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கான கடன்வசதி தொடர்பான மீளாய்வு கூட்டங்களை கடந்த 2 வாரங்களாக கொழும்பில் நடத்தியிருந்தது.

எனினும், இரண்டாவது தவணைக் கொடுப்பனவுக்கான காலம் எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை என்பதுடன், அரச வருமானத்தை அதிகரிப்பத்தில் அரசாங்கம் அதிக கவனம் எடுக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அறிவித்திருந்தது.



இந்தநிலையில் குறித்த பேச்சுவார்த்தைகளில் இலங்கையின் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன பங்கேற்வில்லையெனவும், இதன்காரணமாக, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு உரிய பதில்கள் வழங்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இதன்போது, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன சீனாவில் இருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், தமது பயணம் உரிய அறிவிப்புக்களுடன் திட்டமிடப்பட்டதை இதன்போது சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியிருந்ததாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், திறைசேரி செயலாளர் சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த காலப்பகுதியில், காணொளி தொழில்நுட்பம் ஊடாக சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டதாக இராஜாங்க அமைச்சர ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் திட்டம் தொடர்பில் அரசியல் நோக்கங்களுக்காக பல்வேறு தரப்பினர் பொய்யான பிரசாரங்களை வெளியிட்டு வருவதாகவும், குறித்த கலந்துரையாடல்களில் திறைசேரி செயலாளர் பங்கேற்கவில்லை என வெளியான தகவல் அவற்றில் ஒன்றெனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# மாணவர்களுக்கு போதைவஸ்து விற்பனை செய்தவர் சிக்கினார்!

கொழும்பு, ஒக். 03
பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை பகுதியில் வசிக்கும் 27 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களின் பெற்றோர் வழங்கிய தகவலுக்கு அமைய குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 600 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதோடு, தமது வசிப்பிடத்தில் மறைத்து வைத்திருந்த 1080 போதை குளிசைகளும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபரை களுத்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

# கொதிகலன் குழாய் வெடித்து இந்தியப் பிரஜை உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 03
வெலிபன்ன - தர்கா நகர் பகுதியில் உள்ள தொழிற்சாலை ஒன்றின் கொதிகலன் குழாய் ஒன்று வெடித்ததில் இந்திய பிரஜையொருவர் உயிரிழந்தார்.

அத்துடன், மேலும் 2 இந்திய பிரஜைகள் காயமடைந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றிரவு குறித்த கொதிகலன் குழாய் வெடித்துள்ளதுடன், உயிரிழந்த குறித்த இந்திய பிரஜை 34 வயதுடையவர் என பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# யானைகள் அட்டகாசத்தால் நெல் களஞ்சியசாலை சேதம்!

## நாவிதன்வெளியில் சம்பவம்

அம்பாறை, செப். 03

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகின்றன. இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி - சவளக்கடை பிரதேசத்துக்குள் நேற்று முன் தினம் இரவு புகுந்த யானைகள் நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள நெல் களஞ்சியசாலையை துவம்சம் செய்துள்ளன.

மேலும், அங்கிருந்த நெல் மூடைகளை நாசப்படுத்தியதுடன் அப்பகுதியில் உள்ள சுற்று வேலிகளையும் யானைகள் தகர்த்துள்ளன.



அதேவேளை அப்பிரதேசத்தை அண்டிய பகுதியிலுள்ள சில பயிர்களுக்கும் பாரியளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் இரவு வேளைகளில் அப்பகுதியில் வசிப்பதற்கு பொதுமக்கள் அச்சப்படுகின்றனர். (அ)

# விபுலானந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகள் தேசிய ரீதியில் சாதனை!



காரைதீவு, செப். 03

காரைதீவு விபுலாநந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகள் தேசிய தமிழ் சிங்கள நடன போட்டியில் சாதனை படைத்துள்ளனர்.

இத் தமிழ் சிங்கள நடன தேசிய மட்ட போட்டியானது நேற்று முன் தினம் கண்டி பொல்கொல மகாவலி தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெற்றது.

புத்தசாசன மற்றும் கலை, கலாசார அமைச்சின் ஏற்பாட்டில்" பிரதீபா" தேசிய மட்டப் போட்டிக்கு கல்முனை கலாசார மத்திய நிலையத்தினூடாக காரைதீவு விபுலானந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகள் பங்கேற்றனர்.

அங்கு அவர்கள் 2ஆம் இடத்தில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர். (அ)

# கோரக்கர் வித்தியாலயத்தில் மேசைப்பந்து அறிமுக நிகழ்வு



அம்பாறை, செப். 03

சம்மாந்துறை சிறி கோரக்கர் தமிழ் வித்தியாலயத்தில் மேசைப்பந்து விளையாட்டு அறிமுகம் செய்யும் நிகழ்வும் பயிற்சி முகாமும் பாடசாலை அதிபர் எஸ்.இலங்கோபன் தலைமையில் பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பாளர் கே. எல்.எம் சகியினால் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

பயிற்றுவிப்பாளராக தேசிய கல்வி நிறுவனத்தின் சுகாதாரமும் உடற்கல்வியும் உதவி விரிவுரையாளர் கே.எல்.எம் சப்றி, அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் ஆசிரியர் எம்.எம்.எம். ஆசிக் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர். (அ)

# சிறுவர் மென்பந்து கிரிக்கெட் திருமலை அணியினர் சம்பியன்



திருமலை, செப். 03

உலக சிறுவர் தினத்தையொட்டி கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட சிறுவர்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நேற்று முன் தினம் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் என்.எம்.நௌபிஸ் தலைமையில் இடம்பெற்ற இப் போட்டிக்கு கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி ஆர். றிஸ்வானி பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் பி.மதனவாசகன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களத்தின் கீழ் இயங்கும் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்ற சிறுவர்கள் பங்குபற்றினர்.

மாவட்ட ரீதியாக நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் தெரிவாகியவர்களை மாகாண மட்டத்தில் கலந்துகொள்ள வைக்கும் நோக்கில் இடம்பெற்ற இப் போட்டியில், ஆண்கள் பிரிவில் 3 அணியினரும், பெண்கள் பிரிவில் 3 அணியினரும் பங்குபற்றினர்.

அணிக்கு 11 பேர் கொண்ட இச்சுற்றுப்போட்டி, 6 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக அமைந்தது. இதில் திருகோணமலை மாவட்ட ஆண்கள் அணியினர் வெற்றி பெற்றனர். பெண்கள் அணியில் மூன்று மாவட்ட அணியினரும் கூட்டு வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் வெற்றி பெற்ற பெண்கள் அணியினருக்கான கூட்டு கிண்ணத்தை கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி ஆர். றிஸ்வானியும், ஆண்களுக்கான சம்பியன் கிண்ணத்தை கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் என்.எம்.நௌபீஸும் வழங்கினர். (அ)

# 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முத்திரை வெளியீடு



மட்டக்களப்பு, செப்.

கல்விச் சேவையில் 150 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசியப் பாடசாலையின் சாதனையைக் கௌரவிக்கும் வகையில் முத்திரை ஒன்று வெளியிடப்பட்டது.

சிவப்பு மற்றும் நீலநிறப் பின்னணியில் கல்லூரியின் தனித்துவமான அழகிய முகப்புத் தோற்றத்தையும், கல்லூரியின் இலச்சினையையும் கொண்டதாக வடிவமைக்கப்பட்ட இந்த ஞாபகார்த்த முத்திரை ரூபா 25 பெறுமதியுடையதாகும்.

1873 ஆம் ஆண்டில் இயேசு சபை துறவி வண. பிதா. பேர்டினன்ட் பொனெல் இனால் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆண்கள் பாடசாலை 150 ஆவது ஆண்டினைப் பூர்த்தி செய்கின்றது. இதனைக் குறிக்கும் வகையில் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த முத்திரை வெளியிடப்பட்டமை சிறப்பம்சமாகும். (அ)

# புதையல் தோண்டிய 6 பேர் கைது

திருமலை, செப். 03

திருகோணமலை இடிமன் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 6 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிண்ணியா இடிமன் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நிலையில் குறித்த 6 பேரையும் நேற்று முன் தினம் இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது சொகுசு வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கிண்ணியா, இறக்கக்கண்டி மற்றும் கம்பஹா பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# குழாய்க்கிணறு அமைப்பு

அம்பாறை, செப். 03

பொத்துவில் களப்புக்கட்டு மீனவர் சங்கத்துக்கு குழாய்க் கிணறு அமைத்துக்கொடுக்கப்பட்டது.

"நிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எயிட்" சமூகசேவை அமைப்பிடம் பொத்துவில் களப்புக் கட்டு மீனவர் சங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கமைய இந்த குழாய்க்கிணறு அமைக்கப்பட்டது.

அமைப்பின் ஸ்தாபகர் நிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கந்து கொண்டு குழாய்க் கிணற்றை திறந்து வைத்தார். (அ)

# அமேசன் காடுகளில் பெரும் வறட்சி நிலை!

பிரேசிலியா, ஒக்.03

பிரேசில் நாட்டின் வடமேற்கில் தொடங்கி கொலம்பியா, பெரு உட்பட பல தென் அமெரிக்க நாடுகள் வரை பரவியுள்ளது அமேசான் மழைக்காடு.

வடக்கு பிரேசிலில் அமேசோனாஸ் மாநிலத்தின் தலைநகரமான மனோஸ் நகருக்கருகே உள்ளது டெஃப் பிராந்தியம். இப்பகுதியிலும் அமேசான் காடுகள் பரவியுள்ளது. இப்பகுதி முழுவதிலும் சமீப காலமாக பெரும் வறட்சி ஏற்பட்டுள்ளது. நீர் நிலைகளில் வெப்பம் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. ஒரு சில இடங்களில் வெப்பம் 102 பாகை பரனைட் அளவை தொட்டு விட்டது.

இதன் காரணமாக இங்குள்ள டெஃப் ஏரியில் நூற்றுக்கணக்கான டொல்பின்கள் உயிரிழந்து மிதக்கின்றன.

"இத்தகைய சம்பவம் இதற்கு முன்பு நடைபெறாதது. டொல்பின் மீன்கள் இறந்ததற்கும் அதிகளவு வெப்பத்திற்கும் உறுதியான தொடர்புள்ளது. ஆனால், வெப்பநிலை அதிகரிப்பதற்கான காரணத்தை இதுவரை கண்டறிய முடியவில்லை" என பிரேசில் அறிவியல் துறையின் ஆதரவில் இயங்கும் மமிரவா நிறுவனம் தெரிவித்துள்ளது.

உயர்ந்து வரும் வெப்ப நிலை காரணமாக அமேசான் காடுகளில் உள்ள நீர்மட்டமும் குறைந்து கொண்டே வருகிறது. பரப்பளவில் கிட்டத்தட்ட அவுஸ்திரேலியாவின் அளவிற்கு பரந்து விரிந்துள்ள இக்காடுகளில் இது போன்ற வானிலை நிகழ்வுகள் நடைபெறுவதால் ஒரு இலட்சம் பேருக்கும் மேற்பட்டோரின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இயற்கைக்கு எதிரான பல நடவடிக்கைகளில் மனிதர்கள் ஈடுபட்டு வருவதால் இது போன்ற விசித்திரமான பருவநிலை மாற்றங்கள் ஏற்படலாம் என சுற்றுச்சூழல் நிபுணர்கள் தொடர்ந்து எச்சரித்து வந்தனர். இந்த நிகழ்வு அதனை உறுதிப்படுத்துவதாக உள்ளதாக சமூக வலைதளங்களில் கருத்து நிலவுகிறது.(அ)

## இறுதி சடங்கில் பங்கேற்ற 25 பேர் கடத்தப்பட்டனர்!

நைஜர், ஒக். 03

நைஜீரியாவில் இறுதி ஊர்வலத்தின் போது துப்பாக்கி முனையில் 25 பேர் கடத்தப்பட்டனர்.

நைஜீரியா நாட்டின் தென்மேற்கு மாகாணமான ஒட்டோவில் இறுதிச்சடங்கு ஊர்வலம் நடைபெற்றது. இதில் உயிரிழந்தவரின் உறவினர்கள், நண்பர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அப்போது திடீரென பயங்கர ஆயுதங்களுடன் வந்த மர்ம நபர்கள் அவர்களை சுற்றி வளைத்தனர்.

இதனையடுத்து துப்பாக்கி முனையில் சுமார் 25 பேரை அவர்கள் கடத்தி சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அவர்கள் யார்? எதற்காக கடத்தினார்கள்? என்பது இன்னும் தெரியவில்லை. எனவே பொலிஸார் கடத்தப்பட்டவர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## தேவாலயக் கூரை உடைந்து மெக்சிக்கோவில் 10 பேர் பலி!



மெக்சிக்கோ சிற்றி, ஒக். 03

மெக்சிக்கோவில் தேவாலயமொன்றின் மேற்கூரை உடைந்து வீழ்ந்தில் 10 பேர் உயிரிழந்தனர். 49 பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மெக்சிக்கோவின் கடலோர மாநிலமான தமௌலிபாஸில் உள்ள செண்டா குரூஸ் தேவாலயத்தில் வழிபாடு நடந்து கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. அந்த நேரத்தில் தேவாலயத்தில் குறைந்தது 100 பேரளவில் இருந்தனர் என்று கூறப்படுகின்றது.

குறித்த பகுதியில் தொடர் மீட்பு பணிகள் இடம்பெற்று வருவதாக மீட்பு படையினர் தெரிவித்துள்ளனர்.(அ)

## இந்தியா - மத்தியகிழக்கு - ஐரோப்பாவை இணைக்கும் புதிய பொருளாதார வழித்தடம்

### மோடியின் புதிய வியூகம்

புதுடில்லி, ஒக்.03

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இணைந்து இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பாவை இணைக்கும் புதிய பொருளாதார வழித்தடத்தை உருவாக்க தயாராக இருப்பதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அதன்படி, இந்தப் பொருளாதாரப் பாதை அடுத்த சில நூறு ஆண்டுகளுக்கு உலக வர்த்தகத்தின் பிரதான மையமாக இருக்கும்.

இதன் மூலம் ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளுக்கு இடையே ரயில் மற்றும் கடல் வலையமைப்புகள் மூலம் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வலையமைப்புகள் விரிவுபடுத்தப்படும் என்றும் இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பாவை இணைக்கும் புதிய பொருளாதார வழித்தடம் தென்கிழக்கு ஆசியா, மத்திய ஆசியா, ரஷ்யா மற்றும் ஐரோப்பாவை இணைக்கும் 'ஒரு பாதை - ஒரு பெல்ட்' திட்டத்திற்கு அமெரிக்காவும் ஆதரவளிக்கும் என பலரால் கூறப்பட்டது.

சீனாவின் வளர்ச்சியை தடுக்கும் மூலோபாய செல்வாக்கைப் பெறுவதற்கான உள்நோக்கத்துடன்



அமெரிக்கா இந்த திட்டத்துக்கு ஆதரவளிக்கும்.

இந்த திட்டத்தில் ஈடுபடுவதால் அமெரிக்காவிற்கு எந்த குறிப்பிட்ட நன்மையும் இல்லை. ஆனால் வளர்ந்து வரும் சீன விரிவாக்கத்தை எதிர்கொண்டு இந்தியாவிற்கு ஆதரவை வழங்குவதன் மூலம் அதன் இராஜதந்திர இருப்பை வலுப்படுத்த அமெரிக்கா எதிர்பார்க்கிறதாகவும் கூறப்படுகிறது.(அ)

## தீ பிடித்தது கேளிக்கை விடுதி! ஸ்பெயினில் 13 பேர் பலி!!

மட்ரிட், ஒக்.01

ஸ்பெயின் நாட்டின் தென்கிழக்கு நகரமான முர்சியாவில் இரவு நேர கேளிக்கை விடுதி ஒன்று செயல்படுகிறது. வார இறுதியை முன்னிட்டு இங்கு பலர் கூடியிருந்தனர். அப்போது அந்த விடுதியில் திடீரென தீப்பிடித்து எரிந்தது. இந்த தீ மளமளவென அருகில் இருந்த கட்டடங்களுக்கும் வேகமாக பரவியது. இதனால் அந்த பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது.

இதுகுறித்த தகவலின்பேரில் அங்கு சென்ற தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்க தண்ணீரை பீய்ச்சியடித்தனர். சில மணி நேர போராட்டத்துக்கு பின்னர் இந்த தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. எனினும் இந்த தீ விபத்தில் 13 பேர் பலியாகினர். படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (அ)



## உக்ரைனின் போர்த்திறனை பலவீனப்படுத்த முடியாது!




கீவ், ஒக்.03

ரஷ்யாவுக்கு எதிரான தமது நாட்டின் போர்த்திறனை பலவீனப்படுத்த எந்தவொரு சக்தியாலும் இயலாது என்று உக்ரைனிய ஜனாதிபதி வெலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்து உள்ளார்.

உக்ரைனிய தற்காப்பாளர்கள் தின விடுமுறையை முன்னிட்டு பதிவு செய்யப்பட்ட அவரது உரை ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது.

உக்ரைன் வெற்றிபெறும் வரை போரைத் தொடர உறுதிபூண்டு இருப்பதாக அவர் அந்தப் பேச்சில் குறிப்பிட்டு உள்ளார்.

உக்ரேனின் நிலைத்தன்மை, பலம், துணிச்சல் இவை எதனையும் எந்தவொரு சக்தியாலும் சீர்குலைத்துவிட முடியாது என்றும் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கான நிதி உதவி அளிக்கும் மசோதாவை அமெரிக்க பாராளுமன்றம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதைத் தொடர்ந்து திரு ஸெலென்ஸ்கியின் கருத்து வெளியாகி உள்ளது.

இதற்கிடையே, அமெரிக்கத் தற்காப்பு அமைச்சர் லொய்ட் ஆஸ்டினுடன் தொலைபேசி வழி உரையாடியபோது ராணுவ உதவிக்கான மறுஉறுதியை அவர் அளித்ததாக உக்ரைன் தற்காப்பு அமைச்சர் ரஸ்டெம் உமெரோவ் தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், இரு நாட்டுக் கொடிகளின் படங்களையும் வெளியிட்டு அமைச்சர் ஆஸ்டின் உறுதி அளித்துள்ளார்," என்று ரஸ்டெம் தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கான அமெரிக்க உதவி தொடரும் என்றும் போர்க்களத்தில் உக்ரேனிய வீரர்களுக்கு வலுவான ஆதரவு தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், உக்ரைனுக்கு நிதி உதவி வழங்குவதை உள்ளடக்கிய புதிய வரவுசெலவுத் திட்ட முடிவு தொடர்பாக உக்ரேனிய, அமெரிக்க வெளியுறவு அமைச்சுகள் பணியாற்றி வருவதாக உக்ரைனிய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் கூறியுள்ளார்.(அ)

# சமூக ஊடகங்களை முடக்கும் அவசியம் அரசுக்கு கிடையாது

## கூறுகிறார் நீதியமைச்சர்

கொழும்பு, செப். 03

சமூக ஊடகங்களை முடக்கவேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு இல்லை. அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ள பேச்சு சுதந்திரம் பிறருக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகவே நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை முழுமையாக ஆராயாமல் ஒரு தரப்பினர் அதற்கு எதிரான கோசங்களை எழுப்ப ஆரம்பித்துள்ளார்கள்.

சமூக ஊடகங்களை முடக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு கிடையாது.அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ள பேச்சுச் சுதந்திரத்தை அனைவரும் முறையாகப் பயன்படுத்துகிறார்களா என்பதை ஆராய வேண்டும்.பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் உள்ளது என்பதற்காக சமூக வலைத்தளங்களில் ஒருவரின் கௌரவத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் எவரும் செயற்பட முடியாது.



பிறருக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் சமூக வலைத்தளங்களை பயன்படுத்தக்கூடாது என்பதற்காகவே நிகழ்நிலை காப்பு சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சட்டமூலத்தின் உள்ளடக்கத்தை நாட்டு மக்களுக்கு தெளிவுப்படுத்துவேன். சமூக வலைத்தளங்கள் கண்காணிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் நாட்டு மக்களும் உள்ளார்கள்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமும் தற்போது விமர்சிக்கப்படுகிறது. சகல தரப்பினரையும் திருப்திப்படுத்தும் வகையில் சட்டமூலத்தை தயாரிக்க முடியாது. ஆகவே, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் சகல தரப்புக்களுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயார்-என்றார். (அ)

# மகாத்மா காந்தியின் ஜனன தினம் யாழில்



வடமராட்சி, ஒக். 03

மகாத்மா காந்தியின் ஜனன தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள மகாத்மா காந்தியின் சிலைக்கும் பருத்தித்துறை நகரில் நவீன சந்தையின் தென்மேற்கில் அமைந்துள்ள மகாத்மா மாகாந்தியின் சிலைக்கும் நேற்று திங்கள் காலை9.30 மணியளவில் மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர் ராகேஸ் நடராஜ் , யாழ்.மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன், சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறுதிருமுருகன் மற்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மகாத்மா காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்து நினைவு கூரப்பட்டதுடன் மகாத்மா காந்தியின் வரலாற்றை உள்ளடக்கிய காந்தீயம் இதழ் வெளியிடப்பட்டது. இந் நிகழ்வில் மதத் தலைவர்கள், பொதுமக்களெனப் பலர் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறை நிகழ்வில் அறவழிப்போரட்டக் குழுவைச் சேர்ந்த வி.ஜி.தங்கவேல் காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலித்தார். (அ-02)

# புதுக்குடியிருப்பு விபத்தில் இளைஞர் ஒருவர் மரணம்!

முல்லைத்தீவு, ஒக். 03

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோம்பாவில் பகுதியில் நேற்று முன் தினம் நள்ளிரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

7 ஆம் வட்டாரம் சிவநகர் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த இன்பநாதன் கஜலகன் (வயது-28) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

இவரது சடலம் மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பிலான விசாரணையினை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் கையை கடித்துவிட்டு தப்பினார் அம்புலன்ஸ் சாரதி!

மன்னார், ஒக். 03

ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் அம்புலன்ஸ் சாரதி ஒருவரைக் கைது செய்ய சென்ற மன்னார் பிரிவு குற்றப் புலனாய்வு திணைக்கள பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் கையைக் கடுமையாக கடித்துவிட்டு தப்பிச் சென்றார் என முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் முருங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மன்னார் பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் முருங்கன் வைத்திய சாலை பிரதான நுழைவாயிலுக்கு அருகில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவரைக் கைது செய்ய முற்பட்டபோதே இவ்வாறு சந்தேக நபர் கையைக் கடித்து விட்டு தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# விமான நிலையம் ஊடாக நாட்டுக்குள் பிரவேசிக்கும் வெளியேறும் குற்றவாளிகளுக்கு பொறி வைக்க திட்டம்

கொழும்பு, ஒக். 03

விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் குற்றவாளிகளைக் பொறிவைக்கும் வகையில் கடந்த வாரம் நடைமுறைப் படுத்தப்பட்டு பல மணித்தியாலங்கள் நிறுத்தப்பட்டிருந்த விசேட பாதுகாப்பு வேலைத் திட்டம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை கடந்த மாதம் 19 ஆம் திகதி முதல் குடிவரவு அதிகாரிகள் பெற்றுள்ளனர். தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க தலைமையில் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முப்படைகளின் தளபதிகள், புலனாய்வு அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகள் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விசேட வேலைத்திட்டம் கடந்த 19 ஆம் திகதி அமுல்படுத்தப்பட்ட சில மணித்தியாலங்களில் அமுல்படுத்த தீர்மானம் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுங்க திணைக்களத்துக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை



கொழும்பு, ஒக். 03

138 உதவி சுங்க அத்தியட்சகர்கள் மற்றும் 45 சுங்க பரிசோதகர்கள் நியமிக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ருவன்வெல்ல, கலபிடமட பிரதேசத்தில் இடம்பெற்ற சமய நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இந்த ஆட்சேர்ப்புக்கான வர்த்தமானி அறிவித்தல் செப்ரெம்பர் 22 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகி ஒக்ரோபர் 16 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையவுள்ளது.

இது தொடர்பான விண்ணப்பம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

21 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களே இந்த பதவிகளுக்காக இணைக்கப்படவுள்ளதாக என நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# தேங்காய் திருடன் மீது துப்பாக்கிப் பிரயோகம்!

கொழும்பு, ஒக். 03

கால்நடை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான தோட்டமொன்றில் தேங்காய் திருடச் சென்றார் எனக் கூறப்படும் நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தோட்டத்தின் காவலாளியே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தெரிய வந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பன்னல பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யக்வில-ஹகவா பகுதியைச் சேர்ந்த ஒருவரே காயமடைந்துள்ளார்.

தேங்காய் திருட சென்ற போது தோட்டக் காவலாளியே துப்பாக்கியால் சுட்டதாக காயமடைந்த நபர் பொலிஸாரிடம் வாக்குமூலமளித்துள்ளார். (அ)

## விமானங்களின்...

மணித்தியாலங்கள் தாமதமானதால் பயணிகள் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி இருந்தனர்.

சிங்கப்பூர், பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கான விமானங்கள் பல மணி நேரம் தாமதமாகவே சென்றிருந்தன.

28ஆம் திகதி அதிகாலை 2.30 மணியளவில் பாகிஸ்தானின் லாகூர் நோக்கிப் புறப்படவிருந்த யு.எல் 153 என்ற விமானம் தாமதமானதால் அந்த விமானத்தில் பயணம் செய்விருந்த இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர், பயணம் செய்ய முடியாததால் மீண்டும் திரும்பிவர நேர்ந்தது.

அதன்பின், இந்தியாவின் சென்னை மற்றும் பங்களாதேஷ் தலைநகர்டாக்கா செல்லும் விமானங்கள் தாமதமானதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

சிங்கப்பூரின் சாங்கி விமான நிலையத்திற்கு 28ஆம் திகதி பிற்பகல் 12.15 மணிக்கு புறப்பட வேண்டிய யு.எல் 308 என்ற விமானம் சுமார் ஐந்து மணி நேரம் தாமதமாகவே புறப்பட்டிருந்தது.

இதேவேளை, கடந்த 27ஆம் திகதி அதிகாலை சிங்கப்பூர் செல்லவிருந்த விமானத்தில் ஏற்பட்ட பிரச்னையால், வணிக வகுப்பு பயணிகள் சிலர், இந்தோனேசியாவின் ஜகார்த்தா வழியாக சிங்கப்பூருக்கு மற்றொரு விமானத்தில் செல்ல நேரிட்டது.

கடந்த ஒருவாரக்காலத்தில் மாத்திரம் சுமார் எட்டு விமான சேவைகள் தாமதமாகியுள்ளதால் சிறிலங்கன் விமான சேவைக்கு 6 மில்லியனர் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## இந்த மாத ...

உள்நாட்டு கடன்களை திருப்பி செலுத்துவதை கடந்த ஆண்டு மே மாதம் நிறுத்திய பின்னர், அதன் வெளிநாட்டு கடனை மறுசீரமைப்புச் செய்வது தொடர்பாக ஜப்பான், சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட கடன் வழங்குநர்களிடமும் மற்றும் இரு தரப்பு கடன் வழங்குநர்களுடனும் இலங்கை பல சுற்று பேச்சுகளை நடத்தியது.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இந்தியா உள்ளிட்ட இலங்கையின் முக்கிய கடன் வழங்குநர்கள் குழு, மொரோக்கோவில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி கூட்டங்களின் போது அந்த நாட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட விரும்புகிறது. என்றாலும், இந்தக் குழுவில் சேர்வதை சீனா எதிர்க்கிறது.

“சீனாவுடன் அல்லது சீனா இல்லாமல் கடன் வழங்கும் நாடுகளிடையே ஒரு உடன்பாட்டை எட்டுவதை நாங்கள் இலக்காகக் கொண்டுள்ளோம்” என்று ஜப்பானிய நிதி அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் ரொய்ட்டர்ஸிடம் கூறியுள்ளார்

“நாங்கள் எங்களால் முடிந்ததைச் செய்வோம், ஆனால், இந்த மாதத்தில் ஒரு ஒப்பந்தம் எட்டப்படுமா என்பதை எங்களால் இன்னும் சொல்ல முடியாது. இந்த மாதம் நாணய நிதியக் கூட்டங்களில் அதைச் செய்யலாம் என்று நான் தனிப்பட்ட முறையில் நினைக்கிறேன்“ - என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையின் ஒட்டுமொத்த வெளிநாட்டுக் கடனில் 42 வீதத்தை அதன் மிகப்பெரிய ஒற்றைக் கடனாளியான சீனாவும், அதனைத் தொடர்ந்து ஜப்பான் 24 வீதமும், இந்தியா 15 வீதமும், பிரான்ஸ் 4 வீதமும் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நீதிபதி சரவணராஜா இராஜினாமாவால் சர்வதேச உதவிகளை இழக்க நேரிடும்! ரிஷாத் பதியுதீன் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.03

நீதித்துறைக்கு ஏற்படுத்தப்படும் அழுத்தங்களால் சர்வதேச உதவிகளை நம்பியுள்ள எமது நாட்டுக்கு பாரிய நெருக்கடிகள் ஏற்படலாமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் இராஜினாமா குறித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

“மேலாதிக்கச் சிந்தனையில் சில அரசியல்வாதிகள் இன்னும் செயற்படுவதையே நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் மீதான அழுத்தங்கள் புலப்படுத்துகின்றன.

இனப்பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் ஏற்பட்டுள்ள இழுபறிகள், வங்குரோத்துக்குச் சென்றுள்ள நிதி நிலைமைகளால் நாட்டின் மீது சர்வதேசத்தின் கவனம் குவிந்துள்ள சூழலிது.

இவ்வாறுள்ள நிலையில், பொறுப்புக்கூறல் மற்றும் கடன் நிபந்தனைகளை நிறைவேற்றுவதிலும் சர்வதேசம் திருப்தியில் இல்லை. பல்வகையான பொறிக்குள் நாடுள்ளபோது அரசியல்வாதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சிறுபான்மை சமூகங்களின் அபிலாஷைகளுக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்துவதனூடாகவே சர்வதேசத்தின் அபிமானத்தை வெல்ல முடியும்.

ஆணைக்குழுக்களை நிறுவுதல், அரசியலமைப்பில் திருத்தம் செய்தல் என்பவை கண்துடைப்புக்காகவா செய்யப்படுகிறது என்ற சந்தேகங்களைக் கிளறும் வகையிலே சிலரின் செயற்பாடுகள் உள்ளன.

பாராளுமன்ற நிலையியற் கட்டளையையும் மீறி பாராளுமன்ற உறுப்பினர் சிலர் தெரிவித்த கருத்துக்கள், நீதித்துறையை பாரபட்சத்துக்குள் புகுத்துவதற்கான முயற்சியா? எனக் கேட்க விரும்புகின்றேன்.

அதிகாரவர்க்கத்துக்குள் அல்லது பெரும்பான்மை விருப்புக்குள் நீதிமன்றங்களையோ அல்லது அரச நிர்வாகத்தையோ கொண்டுவர முயல்வது ஆரோக்கியமாக அமையாது.

முல்லைத்தீவு நீதிபதிக்கு நடந்த கதிபோன்று எவருக்கும் நடைபெறக்கூடாது. அரசாங்கம் இதற்கு உத்தரவாதம் வழங்க வேண்டும்.

நிதி மற்றும் நீதித்துறைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். இல்லாவிடின் பாரிய நெருக்குதல்களுக்கு நாடு உள்ளாவதை தவிர்க்க முடியாது போகும்” என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.(அ)

## நீதித்துறைக்கு...

டது.

அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கைத்தீவில் கடந்த எழுபது (70) ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துவருகின்ற இன முரண்பாடுகள் தொடர்பிலும், சிங்களத்தின் கட்டமைக்கப்பட்ட இன ரீதியான வஞ்சிப்புகள் தொடர்பிலும், அது இனப்படுகொலையாக வியாபகம் பெற்ற வரலாறு தொடர்பிலும் தங்கள் அறிக்கையாளர்கள் ஊடாக தாங்கள் அறிந்துள்ளீர்கள் என்பதை நாம் அறிவோம்.

ஒரு தேசிய இனத்தின் பாரம்பரிய வாழ்விடங்கள் மீதும், அதன் கூட்டுப் பண்பாடுகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நீதி, நிருவாகத் துறை ரீதியான பாகுபாடுகள் மற்றும் காலத்துக்குக் காலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற வன்பறிப்புகள் என்பவை, உலகத்தில் வாழ்கின்ற எண்ணிக்கையில் குறைந்த ஒரு தேசிய இனக்குழுமத்தை எவ்வாறு நிர்மூலமாக்கும் என்பதை உணர்ந்துகொள்வது அத்தனை சிரமமானதல்ல.

இலங்கைத்தீவில் தமிழ்த்தேசிய இனம்மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையும் ஓரவஞ்சகப் போக்கும் இன்று இலங்கைத்தீவில் உள்ள தேசிய இனங்கள் அனைத்தினதும் ஜனநாயக நீதித்துறை சார் உரிமைகளை பறித்துள்ளது என்பது நிதர்சனமாகும். அரசிற்குப் பலம் கிடைக்கின்ற போதெல்லாம் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு நிருவாகத் துறையின் கைப்பொம்மையாக செயற்படும் விதமாகவே நீதித்துறை உருவாக்கப்பட்டு வருகிறது. நீதிச்சேவை ஆணைக்குழுவை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கி அதனூடாக நீதிபதிகளின் நியமனங்கள், பதவி உயர்வுகள், நலனோம்பு நயக்கொடைகள், பயிற்சிகள் மற்றும் பாதுகாப்பு என்பவையெல்லாம் அரசியல் அதிகார விருப்பப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்மூலம் அரசு விரும்பிய தீர்ப்புகளைப் பெறவும், ஆணைகளை வழங்கவும், அரசியல் அதிகாரத்தைக் காபந்து செய்யவும் ஏற்றவகையில் இலங்கையின் நீதித்துறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனால் சட்டத்தின் ஆட்சி பறிக்கப்பட்டு நிருவாகத் துறையின் நோக்கங்களை அடையும் வகையில், விசேடமாக அரசாங்கத்தினது போர்க்குற்றங்கள், இனப்படுகொலை விடயங்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்கள், மனிதப்புதைகுழி விவகாரங்கள், பௌத்தமயமாக்கல், நில மற்றும் பண்பாட்டு ஆக்கிரமிப்பு என்பவற்றை சட்டமுறைமைகளுக்கு முரணாகக் கையாள்வதற்கு நீதித்துறை நிர்ப்பந்திக்கப்பட்டதன் விளைவே கௌரவ நீதிபதி சரவணராஜா அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய நிகழ்வாகும்.

மதிப்பார்ந்த பொதுச்செயலாளர் அவர்களே!

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை தனது ஆட்சியின் நோக்காகக் கொண்டு சர்வாதிகாரச் சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் ஜனநாயக முலாம் பூசிக்கொண்டு திடமான வெளியுறவு, பொருளாதாரக் கொள்கைகள் எவையுமின்றி, உறுதியான அரசியலமைப்பு ஏற்பாடுகளின்றி வெறும் இனத்துவேசச் சிந்தனைகளின்மேல் ஏறிநின்று இலங்கையின் நீதித்துறையினையும் இங்கு வாழ்கின்ற தமிழ்த் தேசிய இனத்தையும் கட்டமைக்கப்பட்ட வழிமுறைகளின் ஊடாக அரசு அழித்து ஒழித்து வரும் உச்ச தருணமாகிய இவ்வேளையில் தாங்களும் சர்வதேச சமூகமும் நேரடியாகத் தலையீடுசெய்து அமைதி, சமாதானம், நல்லிணக்கம், நீதித்துறையின் சுயாதீனம் என்பவற்றைப் பாதுகாக்கவும் சகோதரத்துவம் மிக்க இலங்கையைக் கட்டியெழுப்பவும் தங்கள் எல்லாவகை வல்லமைகளும் அணுகுமுறைகளும் சமரசங்களற்ற வகையில் இலங்கைத் தீவுக்குத் தேவையென தங்களை அழைத்து நிற்கிறோம் என்றுள்ளது. (அ)

# சர்வதேச குடியிருப்பு தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள்

## 500 பேருக்கு உறுதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஒக். 03

சர்வதேச குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நேற்று முதல் குடியிருப்பு வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பான நகர்ப்புற பொருளாதாரம் எனும் தொனிப்பொருளில் இந்த வருடத்துக்கான சர்வதேச குடியிருப்பு தினம் கொண்டாடப்படுகிறது.

1986 ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் ஒக்ரோபர் மாதம் முதலாவது திங்கட்கிழமை சர்வதேச குடியிருப்பு தினம் கொண்டாடப்படுகிறது.

இதற்கமைய பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, குடியிருப்பு வாரம் அறிவிக்கப்பட்டதையடுத்து 500 பயனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான உறுதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## 2024இல்...

ஆண்டுக்கான 886 பில்லியன் ரூபாய் வழங்கப்படவுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு 723 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வமைச்சுக்கு 2023 இல் 614 பில்லியன் ரூபா வழங்கப்பட்டிருந்தது.

பாதுகாப்பு அமைச்சுக்கு 423 பில்லியன் ரூபாவும், சுகாதார அமைச்சுக்கு 410 பில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. 2023 இல் பாதுகாப்பு அமைச்சுக்கு 410 பில்லியன் ரூபாயும், சுகாதார அமைச்சுக்கு 322 பில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருந்தது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 403.6 பில்லியன் ரூபாவும், கல்வி அமைச்சுக்கு 237 பில்லியன் ரூபாயும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு 140.7 பில்லியன் ரூபாயும் 2024 ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சுக்கு 100 பில்லியன் ரூபாயும், நீர்பாசன அமைச்சுக்கு 84 பில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அலுவலகத்துக்கு 6.6 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (அ)

## டிரான்...

இன்று இது தொடர்பில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஆதரவளிப்பதாக லலித் எல்லாவல கூறினார்.

நாட்டில் கொலைகள் தாராளமாக நடந்து கொண்டிருக்கும் நிலையில், இதை கட்டுப்படுத்த பொது பாதுகாப்பு அமைச்சருக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கியதாகவும் காலம் கடந்தாலும் நாட்டில் குற்ற அலைகள் அப்படியே இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக பொது பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக சபாநாயகரிடம் நம்பிக்கையில்லா பிரேரணையை விரைவில் கையளிப்பதாகத் தெரிவித்த எல்லாவல, நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதற்கு போதுமான காரணங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.(அ)

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்க தூதுவருடன் சஜித் முக்கிய சந்திப்பு



கொழும்பு, ஒக். 03

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் இலங்கையின் சமூக,பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் அவதனாம் செலுத்தி இரு தரப்பினரும் இங்கு கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையினால் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அமெரிக்கத் தூதுவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது விளக்கமளித்தார்.

அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி திட்டமிட்ட திகதியில் நடத்த திட்டமிட்டிருந்த தேர்தலை ஒத்திவைத்தல்,மக்களை அடக்கு முறைக்கு உள்ளாக்கும் வகையில் மேற்கொண்டுவரும் முயற்சிகள் மற்றும் பல்வேறு சட்டங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேராவும் கலந்துகொண்டார். (அ)

# ரயில் நிலையத்தில் மோதல்

கொழும்பு, ஒக். 03

பாணந்துறை ரயில் நிலையத்தில் ரயில்வே ஊழியர்களுக்கும் மற்றுமொரு குழுவினருக்கும் இடையில் நேற்று ஏற்பட்ட மோதல் காரணமாக ரயில் நிலைய அதிபர், ஊழியர் ஒருவர் மற்றும் மற்றுமொருவர் காயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பாணந்துறை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் தந்தையும் மகனும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மகன் பொலிஸ் பாதுகாப்பில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை சாகர மாவத்தையில் வசிக்கும் 50 வயதுடைய ஒருவரும் 23 வயதான அவரது மகனுமே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

ரயில் பயண சீட்டு பெறுவது தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதத்தின் அடிப்படையில் இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# சாவகச்சேரி விபத்தில் குடும்பஸ்தர் மரணம்!

யாழ்ப்பாணம், ஒக். 03

சாவகச்சேரி, நுணாவில் பகுதியில் நேற்று முன் தினம் இரவு நிகழ்ந்த விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி, நுணாவில், அமிர்தகழி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் விபத்து நிகழ்ந்தது.


மதுபோதையில் வாகனம் செலுத்தி சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட ஒருவரை பார்க்க வந்தவேளையில் இவர் விபத்தில் சிக்கியுள்ளார்.

நுணாவில் பகுதியில் விடுதி நடத்தும், பரமனாதன் ஜோதீஸ்வரன் (வயது-41) என்பவரே உயிரிழந்தார். அவர் தம்பலகாமம், பளை பகுதியைச் சேர்ந்தவர்.

சாவகச்சேரி நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்தவர், எதிரே வந்த பிக்அப் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானார். இதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார். (அ)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# ஸ்கொட்லாண்ட் யார்ட்டின் உதவியை நாடியதா இலங்கை?



**கொழும்பு, ஒக். 03**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த அறிக்கைகளை ஆராய்வதற்காக ஸ்கொட்லாண்ட் யார்ட்டின் உதவியை கோரியுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க கடந்த வருடம் தெரிவித்திருந்தார்.**

அவ்வாறான வேண்டுகோள்களை இலங்கைக்கான பிரித்தானிய தூதரகத்தின் ஊடாக விடுவித்திருக்க வேண்டும். எனினும் அவ்வாறான வேண்டுகோள்கள் விடுக்கப்படவில்லை என தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த செப்ரெம்பரில் உயிர்த்தஞாயிறு தாக்குதல் குறித்த அறிக்கைகளை ஆராய்வதற்காக ஸ்கொட்லாண்ட் யார்ட்டின் உதவியை கோரியுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் மறைகரம் உள்ளதாக என்பதை கண்டுபிடிப்பதற்காக இந்த உதவியை கோரியுள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

எனினும் அரசாங்கம் அவ்வாறான உதவியை கோரவில்லை என பிரிட்டனின் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ)

# முல்லைத்தீவு நீதிபதி இராஜினாமாவின் பின்புலத்தை உடனே கண்டறியுங்கள்!

## அரசிடம் கோருகிறார் குணதாச அமரசேகர




கொழும்பு, ஒக். 03

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி டி. சரவணராஜாவின் ராஜினாமாவின் பின்புலத்தை உடனடியாக அரசாங்கம் கண்டுபிடிக்கவேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

"நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு வெளிநாட்டு தூதரகங்களுடன் தொடர்பு இருந்துள்ளது எனக் கூறப்படுகின்றது. எனவே, அவர் கூறும் காரணங்களை மட்டும் நம்பாமல், இதன் பின்புலத்தை அரசு கண்டுபிடிக்க வேண்டும்.

முல்லைத்தீவு நீதவான் ஏன் பதவி விலகினார் என்பது பற்றி சரியான காரணங்கள் இன்னும் வெளிவரவில்லை. அவர் கூறும் காரணங்களை மட்டும் ஆராயாமல், இது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, உண்மை கண்டறியப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

நீதிபதியை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பின் அதனை நாம் கண்டிக்கின்றோம்." எனவும் குணதாச அமரசேகர குறிப்பிட்டார்.

# பொலிஸாரின் சர்வாதிகாரம் எல்லை தாண்டி நடக்கின்றது

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி

வவுனியா, ஒக். 03

அரச இயந்திரத்தினதும், பொலிஸாரினதும் சர்வதிகாரம் எல்லை தாண்டி சென்றுகொண்டு இருக்கிறது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி மீதான தாக்குதல் குறித்த வழக்கு தொடர்பில் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தியாக தீபத்தினுடைய ஊர்திப் பவனியின்போது திருகோணமலையில் காடையர்கள் தங்களை வைத்து தாக்கி விட்டு எமது உறுப்பினர்கள் தங்களை அச்சுறுத்தியதாக கூறி பொய்யான வழக்கை தாக்கல் செய்திருக்கின்றார்கள்.

அந்த வழக்கில் நாங்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி, நீதிமன்றத்திற்கு உண்மைகளை எடுத்துக்கூறி, அப்பாவிகளான சந்தேகநபர்களை பிணையில் விடுவித்திருக்கின்றோம்

அரச இயந்திரத்தினதும், பொலிஸாரினதும் சர்வதிகாரம் எல்லை தாண்டு சென்றுகொண்டு இருக்கிறது. நீதிபதிகளை நாட்டை விட்டு விரட்டுகின்றார்கள். ஜனநாயக முறையில் போராடுகின்ற அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் மீது பொய்யான வழக்குகளை போட்டு கைது செய்கின்றார்கள்.

இவை அனைத்தும், இந்த நாட்டின் நிர்வாகமானது எந்த விதத்தில் செல்கின்றது என எடுத்துக் காட்டுகிறது என்றால், ஒரு சர்வாதிகார, எதேச்சரதிகாரத்தை நோக்கி இந்த அரசு பயணிக்கிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

நீதிபதிகளின் குரல்வளை நசுக்கப்படுகிறது. ஜனநாயக ரீதியில் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்ற அரசியல் கட்சிகளின் குரல்வளை நசுக்கப்படுகிறது. இது மிலேச்சத்தனத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் வழி வகுக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை போன்ற பன்னாட்டு மன்றங்கள் இனியும் காலதாமதம் இல்லாமல் உடனடியாக இலங்கை அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கின்றோம் -என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இந்தியா - ஐரோப்பா பொருளாதார வழித்தடத்திற்கு துருக்கி எதிர்ப்பு ஏன்?

## இருநாட்டு உறவில் என்ன பிரச்னை?



கடந்த சில நாட்களுக்கு முன் டெல்லியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்ற உலகின் பல பெரிய நாடுகளின் தலைவர்களில் துருக்கி அதிபர் ரெசெப் தயிப் எர்துவானும் ஒருவராக இருந்தார்.

ஜி20 மாநாட்டையொட்டி, பிரதமர் நரேந்திர மோடியுடனான தனது அதிகாரப்பூர்வமான சந்திப்பில், இந்தியாவுடனான பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் அவர் வலியுறுத்தினார்.

தெற்காசியாவில் துருக்கியின் மிகப்பெரிய வர்த்தக பங்காளியாக இந்தியா இருப்பதாக அப்போது எர்துவான் கூறியிருந்தார்.

பிரதமர் மோடி மற்றும் எர்துவான் சந்திப்புக்கு 24 மணி நேரத்திற்கு முன்பு, இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடம் (ஐஎம்இசி) என்ற புதிய திட்டத்தை இந்தியா அறிவித்தது.

இந்த அறிவிப்பின் போது, அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்மட்ட தலைவர்கள் உடனிருந்தனர்.



இத்திட்டத்தின்படி, இந்தியாவின் மேற்குக் கடற்கரை ஐக்கிய அரபு அமீரகத்தின் கடல் மார்க்கமாக இணைக்கப்பட்டு, அங்கிருந்து சவூதி அரேபியா மற்றும் ஜோர்டானுக்கு ரயில் மார்க்கமாக வழித்தடம் ஏற்படுத்தப்படும் என்றும், அதன் பிறகு, இஸ்ரேலில் இருந்து கடல் வழியாக ஐரோப்பாவுடன் இணைக்கப்படும் என்று கூறப்பட்டது.

இந்த புதிய வழித்தடத் திட்டம் குறித்த அறிவிப்பால் மிகவும் அதிருப்தி அடைந்த நாடுகளில் ஒன்றாக துருக்கி இருக்கிறது. இந்தியா - ஐரோப்பா பொருளாதார வழித்தட திட்டத்தை துருக்கி எதிர்க்கிறது. அதிபர் எர்துவானுடன் வந்திருந்த ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது, 'துருக்கியை விட்டுவிட்டு இதுபோன்ற ஒரு வழித்தடத்தை அமைக்கும் எந்தவொரு முயற்சியையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என்று அவர் தெளிவுபடுத்தினார்.

அதே நாளில், கிழக்கு ஆசியாவிற்கும் மேற்கு ஐரோப்பாவிற்கும் இடையில் ஏதேனும் புதிய 'போக்குவரத்து" முறை உருவாக்கப்பட்டால், அது துருக்கியைக் கடந்துதான் செல்ல வேண்டும் என்ற நிலைமையை அதிபர் எர்துவான் தெளிவுபடுத்தினார்.



இந்த ஜி20 மாநாட்டிற்குப் பின் சில நாட்கள் கழித்து, துருக்கி அதிபர் எர்துவான் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவின் நியூயார்க் நகருக்குச் சென்றார். அங்கு உரையாற்றிய போது, கடந்த சில வருடங்களைப் போலவே, எர்துவான் மீண்டும் காஷ்மீர் பிரச்னை குறித்துக் கருத்து தெரிவித்து இந்தியாவைத் தாக்கிப் பேசினார்.

காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானின் நிலையைத்தான் அவர் மீண்டும் வலியுறுத்துவதாகவும், அதற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை என்றும் அறிவித்து அவரது அறிக்கையை இந்தியா வழக்கம் போல் நிராகரித்தது. இந்தியா - துருக்கி உறவில் காஷ்மீர் எப்போதுமே முக்கிய பங்கு வகித்து வந்துள்ளது.

இதற்கிடையில், துருக்கி அதிபர் எர்துவான் ஜி20 மாநாட்டில் பங்கேற்பதற்காக டெல்லி வந்திருந்த போது, புகழ்பெற்ற ஜாமா மஸ்ஜித் செல்ல விரும்பியதாகவும், அங்கு ஷாஹி இமாமைச் சந்திக்க விரும்பியதாகவும், ஆனால், அதற்கு இந்தியா அனுமதி அளிக்கவில்லை என்றும் 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே இந்தியா மற்றும் துருக்கி நாடுகளுக்கு இடையே உறவுகள் மேம்பட்டு வருவதாக கருதப்பட்டு வந்த நிலையில், இதன் பின்பு அந்த உறவு மோசமடைந்துவருகிறது.

உண்மையில், தற்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளன



என்பதில் சந்தேகமில்லை.

துருக்கியின் அண்டை நாடுகளான இஸ்ரேல், கிரீஸ், சைப்ரஸ் மற்றும் ஆர்மீனியாவுடன் அந்நாட்டு உறவுகள் மோசமாக இருக்கும் நிலையில், அதே நாடுகளுடன் இந்தியா காட்டி வரும் நெருக்கமும் இந்தியா - துருக்கி நாடுகளின் உறவுகள் பின்னடைவைச் சந்திப்பதற்கு ஒரு காரணமாக அமைந்துவிட்டதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்தியா மற்றும் துருக்கி இடையே உறவுகள் மேம்படுவதற்கு காஷ்மீர் பிரச்னை தான் பெரிய இடையூறாக இருக்கிறது என டெல்லியில் உள்ள பல அரசியல் ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

உண்மையில், இஸ்லாமிய உலகில் துருக்கியின் செல்வாக்கையும் மதிப்பையும் அதிகரிக்க எர்துவான் அண்மைக் காலமாக காஷ்மீர் பிரச்சினையில் பெரும் கவனம் செலுத்திவருகிறார். பிற அனைவரையும் விட இந்தப் பிரச்னை பற்றி அவர் அதிகமாகப் பேசிவருகிறார்.

கடந்த ஏழு-எட்டு ஆண்டுகளாக ஐ.நா. பொதுச் சபையில், காஷ்மீரில் இந்தியா நடத்தியதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து அவர் தொடர்ந்து பிரச்னை எழுப்பி வருகிறார். அவரது அரசு ஐ.நா. மனித



உரிமைகள் கவுன்சிலில் இந்த பிரச்சினையை பலமுறை எழுப்பியுள்ளது.

அப்சர்வர் ரிசர்ச் ஃபவுண்டேஷனின் மேற்கு ஆசிய நிபுணர் கபீர் தனேஜா இது குறித்துப் பேசுகையில், "காஷ்மீரில் 370வது சட்டப்பிரிவை ரத்து செய்யும் நடவடிக்கையை இந்தியா மேற்கொண்ட போது, அதைக் கண்டித்து பாகிஸ்தானுடன் சேர்ந்து துருக்கியும் ஒரு முஸ்லீம் நாடாக தன்னை முன்னிறுத்திக் கொண்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

2019 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், எழுபது ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் 'காஷ்மீர் மோதலை" உலக நாடுகள் மறந்துவிட்டன என குற்றம்சாட்டி, காஷ்மீர் பிரச்னையில் பொறுப்புடன் செயல்பட அனைத்து நாடுகளையும் எர்துவான் வலியுறுத்தினார்.

கபீர் தனேஜா மேலும் குறிப்பிடுகையில், "காஷ்மீர் பிரச்னையை புறக்கணித்ததற்காக இஸ்லாமியக் கூட்டமைப்பு மற்றும் சவூதி அரேபியாவையும் விமர்சிக்க எர்துவான் தயங்கவில்லை.

அதே நேரத்தில், பாகிஸ்தானுடனான துருக்கியின் 'நட்பு" உறவும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகவே இருந்து வருகிறது.

உண்மையில், பாகிஸ்தானில் நான்கு முறை நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய ஒரே உலகத் தலைவர் எர்துவான் மட்டுமே. இதில், இரண்டு முறை துருக்கி பிரதமராகவும், இரண்டு முறை துருக்கி அதிபராகவும் பங்கேற்றுள்ளார்.

ஒட்டோமான் ஆட்சியை எர்துவான் தொடர்ந்து பெருமைப்படுத்தி வருவதாகவும், துருக்கியின் இந்த பாரம்பரியத்தை உலக அரங்கில் நிலைநிறுத்த விரும்புவதாகவும், அவரது முயற்சிகளில் பாகிஸ்தான் முக்கிய பங்காளியாக இருப்பதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

காஷ்மீர் பிரச்னையில், எர்துவான் ஏன் பாகிஸ்தானின் கருத்தை மீண்டும் கூறுகிறார் என்று யூகிப்பது அவ்வளவு ஒன்றும் கடினமானது அல்ல.

அதே நேரம், நரேந்திர மோடி தலைமையிலான ஒரு இந்துத்துவா அரசியல் சக்தி கடந்த பத்தாண்டுகளாக இந்தியாவில் ஆட்சியில் உள்ளது என்பதுடன், சர்வதேச அரங்கில் "புதிய இந்தியா" எழுச்சியை ஏற்படுத்த மோடி முயன்று வருகிறார்.

(15ம் பக்கம் பார்க்க)

# ‘நீதிக்கு இதுவொரு போராட்டம் இதை நிச்சயம் உலகம் பாராட்டும்’

அனந்த பாலகிட்ணர்

இலங்கையில் நீதித்துறை சார்ந்தோர் அச்சுறுத்தப்படுவதும், அழுத்தங்களுக்குள்ளாக்கப்படுவதும் அவ்வப்போது இடம்பெற்றுவரும் நடவடிக்கைகளாகவே இருக்கின்றன.

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா குருந்தூர் விகாரை, மற்றும் திலீபன் நினைவேந்தல் தொடர்பான தீர்ப்புகள் குறித்து உயர்மட்ட அழுத்தங்குள்ளாகியுள்ள நிலையில் தமது பதவியை இராஜினாமாச்செய்துள்ளார்.

நீதித்துறையின் தனித்துவம் அதன் சுதந்திரம் என்பவற்றை பாதுகாக்க வேண்டிய அரச தரப்பே நீதிபதி ரி. சரவணராஜா விடயத்தில் அசமந்தப் போக்குடன் நடந்து கொண்டிருப்பது கவலைக்குரியதாகவும், இலங்கையில் நீதித்துறை சார்ந்த விழுமியங்களை எள்ளி நகையாடுவதாகவுமிருக்கின்றது.

நீதிபதி ரி.சரவணராஜா குருந்தார் விகாரை விடயம் தொடர்பாக தாம் மிரட்டப்பட்டதாகவும் அழுத்தங்களுக்குள்ளானதாகவும் ஒளிவு மறைவின்றி குறிப்பிட்டுள்ளார். ஒளிவு மறைவின்றி எனக்குறிப்பிடும் போது நாட்டில் பல நீதிபதிகள் உயர்மட்ட அழுத்தங்கள் அரசியல் தலைவீடுகளுக்கு மத்தியிலேயே பணியாற்றுகின்றனர். நீதிபதி ரி. சரவணராஜா போன்ற சிலரே துணிச்சலோடு தமக்கு விடுக்கப்படும் சவால்களை எதிர் கொள்கின்றனர்.

அழுத்தங்கள் அச்சுறுத்தல்கள் மாத்திரமல்ல. நீதிபதிகள் தாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்ட சம்பவங்களும் இலங்கையில் இடம்பெற்றுள்ளன.

சிலவருடங்களுக்கு முன்னர் மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய பெரும் போதைவஸ்த்து வியாபாரியான பொட்ட நௌபர் என்பவரால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இதுதவிர யாழ்ப்பாணத்தில் வித்தியா படுகொலை வழக்கை விசாரணை செய்த மூன்று நீதிபதிகளில் ஒருவரான மா. இளஞ்செழியனும் கொலை மிரட்டலுக்குள்ளான நிலையில் அவரது மெய்க்காப்பாளரான சிங்கள பொலிஸ் கான்ஸ்டபிள் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

எனவே நீதிபதிகள் மீதான அழுத்தங்கள் அச்சுறுத்தல்கள் என்பவற்றை ஒரு போதும் உதாசீனம் செய்துவிட



முடியாது. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தமக்கு விடுக்கப்பட்ட அழுத்தம் அச்சுறுத்தல் என்பவை குறித்து முன்னெச்சரிக்கையோடு நடந்து கொண்டுள்ளார். இதன்மூலம் அவருக்கு ஏற்படக்கூடிய அபாயகரமான நிலைமை குறித்து முழு உலகுமே எச்சரிக்கையோடு அறிந்து கொள்ளும் என்பதனை அறிய முடியும்.

குருந்தூர் விகாரை விவகாரம் மற்றும் சாத்வீக போராளி திலீபன் நினைவேந்தல் விவகாரங்கள் குறித்து நீதிபதி ரி.சரவணராஜா கையாண்ட சட்ட நடவடிக்கைகளே அவர் மீதான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டமைக்கான காரணங்களாக இருக்கின்றன.

அஹிம்சை முறையிலான திலீபன் நினைவேந்தலை முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால அரசு ஏற்றுக்கொண்டிருந்ததோடு இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இறந்தோரை நினைவு கூருவதை தடுக்கக்கூடாது எனவும் முன்னர் கூறியிருந்தார்.

ஆனால் சிலவாரங்களுக்கு முன்னர் திலீபன் நிவேந்தல் ஊர்தி தாக்கப்பட்டதோடு அதில் பயணித்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனும் தாக்கப்பட்டிருந்தார். இதனை சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பானவர்களே வேடிக்கை பார்த்திருந்தனர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து தற்சமயம் நீதிபதி ரி. சரவணராஜா அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

2009-ம் ஆண்டு வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இந்த இரு மாகாணங்களையும் சேர்ந்த மக்கள் சட்டம் ஒழுங்கு, சிவில் நிர்வாகம் என்பவை சீரான முறையில் இயங்கும் என்று நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தனர். பொலிஸ் நிலையங்கள் மீளவும் வடக்கு-கிழக்கில் இயங்க ஆரம்பித்தன. நீதிமன்ற நடவடிக்கைகளும் மீள ஆரம்பமாகின. ஆனால் மக்களது நீதித்துறை மீதான நம்பிக்கையை பலப்படுத்துவதற்குப்பதிலாக முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜா குறித்த விவகாரம் நீதித்துறை மீதான நம்பிக்கையை பலவீனப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

வடக்கு-கிழக்கில் சட்டவாட்சி மீது மக்கள் நம்பிக்கை இழந்து அப்பிரதேசங்களில் அசாதாரண நிலைமைகள் தோற்றம் பெறுவதற்கு அரசியல் தலைவீடுகள் மற்றும் அழுத்தங்கள் என்பவை சட்டம் ஒழுங்கை பேணுவோர் மீது பிரயோகிக்கப்பட்டமையும் முக்கிய காரணமாகும்.

நீதிபதி ரி.சரவணராஜாவின் இராஜினாமாவை சரியான கோணத்தில் அணுகாது அவரது நடவடிக்கையை கொச்சைப்படுத்தும் விதத்தில் தென்னிலங்கையிலிருந்து கருத்துகள் வெளியிடப்படுவதும் கவலைக்குரியதாகவே இருக்கின்றது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இலங்கை நீதிபதிகள் சங்கம் என்பவை நீதிபதி ரி.சரவணராஜா குறித்த விவகாரம் மீது தமது கவனத்தை திருப்பியுள்ளமை வரவேற்புக்குரியதே.

நீதிபதி சரவணராஜா மீதான அச்சுறுத்தலை இலங்கையில் சுயாதீன நீதித்துறை மீது விடுக்கப்பட்டுள்ள ஒரு பெரும் அச்சுறுத்தலாக கவனத்திலெடுத்து சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்காதவரை வடக்கு-கிழக்கில் சட்டவாட்சி மற்றும் நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை இழக்கும் சூழ்நிலைகளே வலுப்பெறும் என்று கருதமுடியும். ●

# இந்தியா - ஐரோப்பா பொருளாதார...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த “புதிய இந்தியா”விற்கு சர்வதேச உலகம் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதுமட்டுமின்றி, ‘காஷ்மீரில் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர முடிந்ததே’ அந்த வெற்றிக்கு முக்கிய காரணம் என்று புதிய இந்தியாவின் தலைமை எப்போதும் கூறி வருகிறது.

அதாவது, இந்தியாவும், துருக்கியும் ஒரே காஷ்மீரை உலக அரங்கில் முற்றிலும் முரண்பட்ட இரண்டு காரணங்களுக்காகப் பயன்படுத்த விரும்புகின்றன. இதுவும் இரு நாடுகளுக்கு இடையேயான கசப்புக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

துருக்கியுடன் மோசமான உறவை வைத்துள்ள அண்டை நாடுகளுடனான தனது உறவை வலுப்படுத்த இந்தியா அண்மைக்காலமாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவற்றில், இஸ்ரேலுடனான இந்தியாவின் நெருங்கிய உறவுகள் நீண்ட தொலைவுக்குச் செல்கின்றன, ஆனால் இந்தியா அண்மையில் கிரீஸ், சைப்ரஸ் மற்றும் ஆர்மீனியாவுடன் உறவுகளை வளர்க்க பல முயற்சிகளை எடுத்துள்ளது.

கடந்த மாதம், தென்னாப்பிரிக்காவில் நடந்த பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்றபின் நாடு திரும்பிய நரேந்திர மோடி, அரசு முறை பயணமாக கிரீஸ் சென்றிருந்தார்.

40 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் ஒருவர் கிரீஸ் நாட்டுக்கு மேற்கொண்ட முதல் பயணம் இதுவாகும்.

அந்தப் பயணத்தின் சில நாட்களுக்குப் பிறகு, இந்தியா - மத்திய கிழக்கு பொருளாதார வழித்தடம் எனப்படக்கூடிய போக்குவரத்துத் திட்டம் டெல்லியில் அறிவிக்கப்பட்டது. இந்த போக்குவரத்துத் திட்டத்தில் ஐரோப்பாவின் கிரீஸ் நாடு ஒரு முக்கியப் புள்ளியாக இணைக்கப்பட்டுள்ளது.

துருக்கியின் பரம எதிரியான கிரீஸ் நாடு இந்த வழித்தடத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதை ஏற்க முடியாது என்று எர்துவான் ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளார்.

மறுபுறம், காஷ்மீர் விவகாரத்தில் கிரீஸ் இந்தியாவை ஆதரிப்பதைப் போல, சைப்ரஸ் விவகாரத்தில் இந்தியாவும் கிரீஸை ஆதரிக்கிறது.

ஆர்மீனியாவுக்கு ஜி-டு-ஜி எனப்படும் அரசுகளுக்கு இடையேயான உடன்படிக்கைகளின் கீழ் ஆயுதங்களை ஏற்றுமதி செய்ய இந்தியா அண்மையில் நடவடிக்கை எடுத்துள்ளது. 1915 ஆம் ஆண்டு நடந்த இனப்படுகொலைக்குப் பிறகு துருக்கியுடன் ஆர்மீனியா உறவை முறித்துக்கொண்டது.

இஸ்தான்புல்லைச் சேர்ந்த மூத்த பத்திரிக்கையாளர் பெகிர் சிட்கி சிரின், இந்தியாவின் இந்த புதிய “இராஜதந்திர முயற்சிகளை” துருக்கி இந்த எல்லா கண்ணோட்டங்களுடன் பார்க்கவில்லை என்று கூறுகிறார்.

அவர் பேசுகையில், ‘துருக்கியின் இருப்பிடப் பகுதியில் இந்தியா தனது செல்வாக்கை அதிகரிப்பதன் மூலம், தனக்கு ஏதாவது ஒரு இடையூறை அளிக்க இந்தியா விரும்புவதாக துருக்கி சந்தேகிக்கின்றது” என்று கூறினார்.

துருக்கியைப் போலவே டெல்லியிலும் கிட்டத்தட்ட அதே உணர்வு இருக்கிறது என்கிறார் கபீர் தனேஜா.

காஷ்மீர் பிரச்னையில் நீங்கள் அத்தகைய மோசமான முறையில் செயல்பட்டால், நாங்கள் உங்கள் பகுதிக்கே வந்து அதற்கான இழப்பீட்டை அங்கேயே கொடுப்போம் என்று துருக்கிக்கு செய்தி அனுப்ப இந்தியா மேற்கொண்ட முயற்சியாக இது இருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் அமெரிக்காவுடன் கிரீஸ்-இஸ்ரேல்-சைப்ரஸ் ஆகிய நாடுகளின் ‘த்ரீ பிளஸ் ஒன்’ குழுவின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள இந்தியாவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது துருக்கி வழக்கம் போல் மகிழ்ச்சியாக இல்லை என்பதைக் காட்டும் நடவடிக்கையாகும்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில், பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சிக் காலத்தில், இருதரப்பு பயணமாக ஒருமுறை கூட அவர் துருக்கி நாட்டுக்குச் சென்றதில்லை.

இந்தியாவின் பிரதமராக, அவர் 2015 இல் ஒருமுறை துருக்கிக்கு பலதரப்பு மாநாடான ஜி20 உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றார்.

அதே நேரம், எர்துவான் இருதரப்பு பயணமாக ஒரு முறை மட்டுமே இந்தியா வந்துள்ளார்.

ஆனால் 2017 இல், அந்த பயணத்திற்கு சற்று முன்பு அவர் அளித்த பேட்டியில், காஷ்மீர் பிரச்னையில் இந்தியா-பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். ஆனால், அவரது அந்த முயற்சி ஒரு வழியில் தோல்வியடைந்தது.

காஷ்மீர் பிரச்னையில் 1972 ஆம் ஆண்டு சிம்லா ஒப்பந்தத்தின்படி இந்தியா -பாகிஸ்தான் இடையே இருதரப்பு தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக இருந்து வருகிறது. இதில் எந்த ஒரு மூன்றாம் தரப்பினரும் தலையிடுவதை இந்தியா விரும்பவில்லை.

இந்த பயணத்திற்கு முன், எர்துவான் காஷ்மீர் பிரச்னையில் சமரசம் பேச முன்வந்ததன் மூலம் இந்தியாவை அவர் கோபத்துக்கு உள்ளாக்கினார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் இன்றுவரை சீராகவில்லை. ஆனால் இரு தரப்பிலும் கசப்புணர்வு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

எர்துவான் போன்ற பாகிஸ்தானின் அதிகாரப்பூர்வமான நண்பர் ‘மத்தியஸ்தராக” இருக்க இந்தியா எப்போதும் விரும்பாது என்பதில் சந்தேகமில்லை.

இந்நிலையில், துருக்கிக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் எதிர்வரும் காலங்களில் ஓரளவு சீராகும் என்பதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை என ஆய்வாளர்கள் நம்புகின்றனர். ●